Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-24 | 06-04-2005 | புதன்கிழமை | ஓசை 47



கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464.
இல:124. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11456)

## அக்கரைப்பற்று அரசியல்துறை செயலகத்தினுள் இராணுவம் அத்துமீறி நுழைந்து தேடுதல்!

### அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலுக்கு புலிகள் கண்டனம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பணிமனையில் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் இல்லாமல் சிறிலங்கா இராணுவத்தினர் சென்று அத்து மீறித் தேடுதல் நடவடிக்கை ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது நபர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்துப் படையினர் இந்த அத்துமீறிய தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

பவல்கவச வாகனத்தை மேற்படி அரசியல் பணிமனைக்கு முன்பாக நிறுத்திப் பயமுறுத்தலில் ஈடுபட்ட படையினர் நேற்று மாலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசின் அடாவடித்தனங்களைக் கண்டித்து குடாநாட்டில் நாளை மறுதினம் கண்டனப் பேரணி

### -பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு

(நல்லூர்)

சிறிலங்கா அரசின் அடாவடித்தனங்களைக் கண்டித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வலிமேற்கு, வலி தென்மேற்குப் பிரதேச பொது அமைப்புக்களினால் மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடத்தப்படவுள்ளது.

நான்கு அம்சக் கோரிக்கையை முன் வைத்து இடம்பெறும் அக்கண்டனப் பேரணியில் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்துப் பொது அமைப்புக்களும் கலந்துகொள்ளவுள்ளன.

மாபெரும் கண்டனப் பேரணி கட்டுடைச் சந்தியில் இருந்து புறப்பட்டுச் சென்று பிரதேச செயலகங்கள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. (41)

### -திருமலை-உப்பாற்றுப்பகுதிக் கரையோரத்தில்

# தாக்குதல் நடத்திய கடற்படைப் படகு மீது

# விடுதலைப்புலிகள் கரையில் இருந்து தாக்குதல்!

### கண்காணிப்புக் குழுவிடமும் முறையீடு

**திருமலை உப்பாற்றுப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தாக்குதல்கள் நடத்தியவாறு கரை யோரத்தை அண்மித்த சிறிலங்கா கடற்படைப் படகு மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து கடற்படைப் படகு பின்வாங்கிச் சென்றது. இச்சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் திருகோண மலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளார்.**

இது குறித்து திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் நேற்றுத் தெரிவிக்கையில்:

இன்று காலை உப்பாற்றுப் பகுதியை நோக்கி ஷெல்குண்டு வெடித்தசத்தம் முதலில் கேட்டது. அதனையடுத்து உப்பாற்றில் இருக்கும்எமது போராளிகளில் இருவர் அது பற்றி அறிவதற்காக உப்பாற்று கடற்கரைக்கு வந்தனர். அந்தநேரம் உப்பாற்றுக் கரையை நோக்கிக் கடற்படைப் படகு ஒன்று வருவதைக் கண்டனர். 200 மீற்றர் பிர தேசத்திற்குள் கடற்படைப்படகு வந்ததைக் கண்ட எமது போராளிகள் அங்கிருந்து ஓடினர். அவ்வாறு ஓடும்போது கடற்படைப் படகிலிருந்து அவர்களை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதனையடுத்தே எமது போராளிகள் திருப்பித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் பலாத்காரங்களைக் கண்டித்து மன்னாரில் பெண்கள் பேரணி

மன்னாரில் நேற்றுப் பெண்களின் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

பெண்கள் மீதான பாலியல் பலாத்காரங்களுக்கு எதிராக இந்தப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்குள் பள்ளிமுனை மன்னார் தனியார் விடுதியில் இருந்த பெண்கள் விசாரணைக்கென அழைக்கப்பட்டு பாலியல் பலாத்காரம் மேற்கொள்ளப்பட்டமை, உயிலங் குளத்தில் புத்திசுவாதீன மற்ற பெண் மற்றும் 4 பிள்ளைகளின் தாயையும், பாலியல் பலாத்காரம் செய்தமையும் கடந்த மாதம் இந்தியாவில் இருந்து வந்த பெண்கள் மூவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட் டமை போன்ற வற்றைக் கண்டித்தே நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.இதன் பின்னர் மகஜர்களும் ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட் டன. (32)

## அமைச்சரவைக்கூட்டம் ஒத்திவைப்பு

மின்சாரசபை மறு சீரமைப்புப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எஞ்சிய பங்கினை மூன்றாம் தரப்புக்கு விற்றல் என்பனவற்றை ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரிக்காது என ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்று மாலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழு கூடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனையடுத்து அமைச்சரவைக் கூட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை ஒத்திவைப்பதென தீர்மானிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

## பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாவிடில் பேரனர்த்த புனரமைப்பு சாத்தியமற்றது

### எதிர்க்கட்சித் தலைவர்கள் சர்வதேச நிதிநிறுவனங்களிடம் வலியுறுத்து

(கொழும்பு)

ஆழிப்பேரனர்த்த பணிகளுக்காக பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் படுவது அவசியமானதாகும். இல்லையேல் புனரமைப்பு என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகிவிடும் என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர்கள் சர்வதேச உதவி நிதி நிறுவனங்களின் இலங்கைக்கான பிரதிநிதிகளிடம் நேற்று வலியுறுத்தியுள்ளனர்.

அரசாங்கத்தால் முன்வைக்கப் பட்டுள்ள கடற்கரையிலிருந்து 100 மீற்றர் திட்டமானது நடைமுறைக்கு சாத்தியமற்றதென எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் உலகவங்கி, ஜெயிக்கா நிறுவனம் மற்றும் சர்வதேச நாணய நிதியம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நேற்று மாலை முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் கே.அமரசிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சாகாமம் வீதியில் கால் நடையாகச் சென்று கொண்டிருக்கையில் வியாபார நிலையமொன்றிற்கு அருகில் வைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

## பிழையான தகவல்களை வெளியிட்டு கதிர்காமர் சர்வதேசத்தை ஏமாற்றுகிறார்

### -வ.கி.ம.உ செயலக பிரதித்தலைவர் கண்டனம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 61-ஆவது செயலமர்வில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்த அறிக்கை பல பிழைகளையும்,தவறுகளையும் கொண்டுள்ளதுடன் அது சர்வதேச சமூகத்தையும், போராளர்களையும் தவறாக வழிநடத்தியுள்ளது என வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பிரதித் தலைவர் கா. சிவபாலன் தெரிவித்துள்ளார்.அவர் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

கதிர்காமர் கூறியதற்கு முற்றிலும் முரணாக, அவசரகாலச்சட்டம் முன்னைய அரசின் சுயவிருப்பத்தின் பேரில் காலாவதியாக விடப்படவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

18.06.1996 அன்று வவுனிக்குளம் பகுதியில் தவறுதலான விபத்தொன்றின் போது தமிழீழ காவல்துறை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

தமிழீழ காவல்துறை வீரர்- அன்ரனி கமல்ராஜ் (கீரபொன்கலன்-அன்ரனிகமல்ராஜ்,காம்றோட் இரண்டாம் வட்டாரம் ஊர்காவற்றுறை. தற்காலிக முகவரி:-அந்தோனியார் கோவிலடி, நாவற்குழி, யாழ்ப்பாணம்) என்பவரே சாவடைந்தவராவார்.

17.06.1996 அன்று வவுனிக்குளம் பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வவுனியாவில் தற்போது அதிகரிப்பு!

(செட்டிகுளம்)

பெண்களுக்கு எதிராகவும்,சிறுமிகளுக்கு எதிராகவும் மேற் கொள்ளப்படுகின்ற வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகம் என்பன தற்போது பெருமளவில் அதிகரித்திருப்பதாக வவுனியாவின் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான குற்றத்தடுப்பு நிலைய பொறுப்பதிகாரி எச்.கே. பத்மினி பிரேமலதா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 19 பாரியளவிலான சிறுவர்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரம் தொடர்பாக முறைபாடுகள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் பாலியல் பலாத்காரம் தொடர்பாகவும் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது தொடர்பாகவும் 30 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், 15 சிறுமிகள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார் பெண்களுக்கு எதிராக 11 பாலியல் துஷ்பிரயோகங்களும், மூன்று கடத்தல்களும் இடம் பெற்று இருக்கின்றன

இது தொடர்பாக சந்தேக நபர்களுக்கு எதிராகவழக்குப் பதியப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. சிறுமிகளுக்கு எதிராகவே அதிகளவு முறைப்பாடு கிடைத்திருக்கின்றது. அந்த சம்பவத்தில் தொடர்புடைய நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.என்றும் அவர் தெரிவித்தார். (21)


## வரி விளம்பரம்

### 2007.A/Lவகுப்புஆரம்பம்

2007 A/Lமாணவர்களுக்கான கலை, வர்த்தக,கணித,விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம். முன்னணி ஆசிரியர் குழாம். இடம் கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர் மேற்கு,கிளிநொச்சி. காலம்- 09.04.2005 (சனி,காலை), (நிர்வாகம்). (5972)

### விற்பனையாகின்றது

வேலுப்பிள்ளை அன்பழகன் ஆசிரியர் அவர்களது தரம் 5 புலமை பரீட்சை மாணவர்களுக்கான பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் (15 நாட்களுக்குள் 1 வினாத்தாள்) அத்துடன் கட்டுரைப் பொத்தகம்,பரீட்சை வழிகாட்டி 2004 ஆம் வருடபுதிய வெளியீடு,பாடசாலைகளுக்கு சிறப்பான கழிவு, கிடைக்குமிடம் வன்னியில் எமது விற்பனை முகவர் பிள்ளையார் பொத்தகசாலை கிளிநொச்சி. (சி.11599)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

அன்பு வாணிபத்தில் சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு. அளவு-"6X4"X12" -கிடைக்குமிடம் அன்புவாணிபம், அந்தோனியார் கோவிலடி, அளம்பில். விலைஒருகல் 20/= (5908)


# திறப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

நெடுங்கேணி இளந்தளிர் முன் பள்ளியின் புதிய கட்டடத்திறப்பு விழா நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

டெனிஸ் அகதிகள் புனரமைப்பு உதவியுடன் நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட புதிய கட்டடமே திறந்துவைக்கப்படவுள்ளது. (10)

# ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

(வவுனியா செய்தியாளர்)

இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தாராடிமெல் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 180 நாட்கள் கடமைக்கு சமூகமளித்த ஆசிரியர்களில் 1933 பேர் நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கப்பட உள்ளனர். இவர்களை ஆசிரியசேவையின்3-ii இற்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# தொழிலாளர் நலன்களை பேணுமாறு வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

விடுமுறை நாட்களில் நிறுவனங்களை மூடி தொழிலாளர்களின் உரிமைகளைப் பேணுமாறு யாழ். மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வணிகர் கழகங்களுக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வாரம் ஒன்றிற்கு 45 மணித்தியாலயங்கள் வேலை செய்த ஒருவருக்கு (உணவு இடைவேளை ஒரு மணித்தியாலயம் உட்பட) ஒன்றரை நாட்கள் கட்டாயமாக விடுமுறை வழங்க வேண்டும் என்பது தொழிற் சட்ட நியதியாகும். அவ்வாறான நியதிக்கு மாறாக சில வணிகர் கழகத்துக்கு கீழ் இயங்குகின்ற வர்த்தக ஸ்தாபனங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கடைகளைப் பூட்டி ஏனைய நாட்களில்கடைகளைத் திறக்கின்றன. இதனால தொழிலாளர்கள் நலன்கள் மீறப்படுவதுடன் அவர்கள் பல இன்னல்களுக்கும் உட்படுகின்றனர்.

இதுசம்பந்தமான ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆகவே இதனைக் கருத்திற் கொண்டு வாரஇறுதி விடுமுறை நாட்கள், போயாமற்றும் வர்த்தக விடுமுறை நாட்களில் கடைகளை மூடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.



வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் தமது தொழில் உபகரணங்களை இழந்தவர்களுக்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் "மீண்டும் தொழிலுக்குச்செல்லுதல்" என்ற கருப்பொருளிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் நேற்று முன்தினம் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

படப்பிடிப்பு.:-இ.சசிக்குமார்.

# நிரந்தர வீடமைப்புத் திட்ட முக்கிய கலந்துரையாடல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிக்கிழக்கு மணற்காட்டுப் பிரதேச மக்களுக்கான நிரந்தர வீடமைப்புத் திட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல்3.00 மணிக்கு குடத்தனையில் உள்ள சுடரொளி சனசமுக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சர்வதேச அரச சார்பற்ற மற்றும் தொண்டர் நிறுவனங்களின், பிரதிநிதிகள் மற்றும் வீடமைப்பு அதிகார சபையின்அதிகாரிகள்,சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், திணைக்களத்தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது சுனாமியால் பாதிக்கப்பட்டவீடிழந்தோருக்கான நிரந்தர வீடுகளில் அமையவுள்ள வசதிகள்,அது சம்பந்தமான விஸ்தீரண விபரங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டு மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வீடுகளின் மாதிரியும் மக்களின் பார்வைக்கு வைக்கப்படும். (33)


கெயார் சர்வதேசம்-இலங்கை

எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல் திட்டம்(LIFT project)

திட்ட உதவியாளர் வருமான ஊக்குவிப்புத் திட்டம் (PAIGA)ஆட்சேர்ப்பு

**(1-வெற்றிடம் வன்னி)**

| | |
|---|---|
| பதவி | :-திட்டஉதவியாளர் வருமானஊக்குவிப்புத்திட்டம் |
| கல்வித்தகைமைகள் | :-வர்த்தக/முகாமைத்துவ பட்டதாரி. |
| முன் அனுபவம் | :-வருமான ஊக்குவிப்புத் தொடர்பான துறையில் 3வருட அனுபவம். |
| சம்பளம் | :-தகைமைக்கு அமைவாக கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும். |
| நியமனம் | :-புதுப்பிக்கக் கூடிய ஒப்பந்தஅடிப்படை. |

**பொறுப்புக்களும், கடமைகளும்:**

- வருமானம் தரும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்தல்
- நடவடிக்கைகளை அமுல்படுத்தல்
- கண்காணிப்பு,மீளளிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல்.
- வலைப்பின்னல் அடிப்படையிலான தொடர்புகளை ஏற்படுத்தல்.
- திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தலும்,அதனை விபரணப்படுத்தலும்.

தகுதியுடையோர் சுயவிபரக்கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன் Care-International,Old Post office, Kandy Road, Paranthan என்ற முகவரிக்கு 5 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், பரந்தனில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கலாம். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

அணித்தலைவர்,
கெயார் சர்வதேசம்,
கிளிநொச்சி.

(சி.11625)


## பரிசளிப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியின் இந்துமாமன்ற பரிசளிப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டில் இந்துமா மன்றம் வவுனியாபாடசாலை மாணவர்களிடையே நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கேபரிசளிக்கப்படவுள்ளது. (10)

## இலச்சினைப் போட்டி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பாடசாலை மாணவர்களிடையே இலச்சினை தயாரித்தல் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.


வவுனியா பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் ஆறு தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் பங்குபற்றும் இவ் இலச்சினை தயாரித்தல் போட்டியில் பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த ஆக்கங்கள் ஐந்தினை நாளை மறுதினத்திற்கு முன்னர் வவுனியா தெற்கு கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (10)

## சத்திரசிகிச்சை

கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் எதிர்வரும் சனிக்கிழமை பிளாஸ்ரிக் சத்திரசிகிக்சை நடைபெறவுள்ளதாக கிளி.மாவட்ட வைத்தியஅதிகாரி கலாநிதி இ.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று எதிர்வரும் பத்தொனபதாம் திகதி மாவட்ட வைத்தியசாலையில் கயரோகக் கிளினிக் சிகிச்சை இடம்பெறவுள்ளது.

அந்தந்தத் திஙங்களில் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் சமூகம் கொடுத்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வண்ணம் மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (சோ)



தர்மபுரம் பகுதியில் இரவுவேளைகளில் அச்சுறுத்தும் வகையில்உலாவி வந்த முதலையை அப்பகுதிமக்கள் நேற்று முன்தினம் பிடித்து அடித்துக் கொன்றுள்ளனர்.


## காணவில்லை



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குஅம்பன் குடத்தனையைச் சேர்ந்த பாலேந்திரன் தவசீலன் வயது-(15) என்பவரே கடந்த30.03.2005 முதல் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் அருகில் உள்ள காவல் பணிமனையில் தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(5974)

# போப்பாண்டவருக்கு பெருந்திரளானோர் கண்ணீர் மல்க அஞ்சலி

## போப்பை சுட்டவரும் இறுதி அஞ்சலி செலுத்த விருப்பம்

(வத்திக்கான்)

**கத்தோலிக்க மதத் தலைவர் இரண்டாம் ஜோன்போலுக்கு உலக நாடுகள் பலவும் அஞ்சலி செலுத்தி வருகிறது. இதேவேளை போப்பாண்டவரை துப்பாக்கியால் சுட்டவரும் இறுதி அஞ்சலி செலுத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.**



போப்பாண்டவரின் உடல் வத்திக்கான் அரண்மனையிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு புனித பீட்டர் தேவாலயத துக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. அங்குஅவரது உடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

லட்சக்கணக்கானவர்கள் நீண்ட வரிசையில் காத்து நின்று போப்பாண்டவருக்குக் கண்ணீர மல்க இறுதி அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். இரவு-பகலாக இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

போப்பாண்டவரின் உடல் அடக்கம நாளை மறுதினம் பகல் 1-30 மணிக்கு நடக்கவுள்ளது. பீட்டா தேவால்யத்தில் உள்ள பாதாள அறையில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படுமென தெரிவிக்கப்படுகிறது

போப்பாண்டவரின் இறுதிச் சடங்கு மற்றும் உடல் அடக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக உலகத்தலைவர்கள் ரோம் நகரில் குவிகிறார்கள்.

தலைவர்கள் வருகையைத் தொடர்ந்து ரோம் நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை போப்பாண்டவரைக் கடந்த 1981 ஆம் ஆண்டு வத்திக்கான் நகரில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல முயன்ற முகமது அலி அகாவும் போப்பாண்டவரின் உடல் அடக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். தனது வக்கீல் மூலம் துருக்கி அரசுக்கு அவர் இது தொடர்பாகக் கடிதம் எழுதி இருப்ப தாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு அனுமதி கிடைக்குமா என்பது தெரியவில்லை.


தனக்கு அனுமதி கிடைக்காத பட்சத்தில் தனது குடும்பத்தில் ஒருவரையாவது அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.



வத்திக்கானின் புனித பீற்றர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள பாப்பரசரின் பூதவுடலைத் தரிசிக்கக் காத்திருக்கும் மக்கள்.

# பிரிட்டனில் மே மாதம் பொதுத் தேர்தல்

## பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்தார்



(லண்டன்)

பிரிட்டனில் வரும் மே மாதம் ஐந்தாம் திகதியில் பொதுத் தேர்தல் நடைபெறுமென பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார்.

இதேவேளை பொதுத் தேர்தல் தொடர்பான அதிகாரபூர்வமான அறிவித்தலை விடுப்பதற்கு முன்னர் பிரதமர் ரொனிபிளேயர் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு சென்று பாராளு மன்றைக் கலைக்குமாறு மகாராணி யார் இரண்டாம் எலிசபெத்தைக் கேட்டுள்ளார்.

இதன் பின்னர் டவுன் என் வீதி பத்தாம் இலக்கத்தில் உள்ள தனது அதிகாரபூர்வ இல்லத்திற்கு வெளியே வைத்து இந்தத் தேர்தல் திகதியை அறிவித்துள்ளார்.

ரொனிபிளேயர் தொழிலாளர் கட்சியின் தலைவராக இருந்து சந்திக்கும் மூன்றாவது தேர்தல் இதுவாகும்

# நேபாளத்தில் கலவரம் நீடிப்பு

## தீவிரவாதிகள் பத்துப் பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஞானேந் திராவுக்கு எதிராக மாவேயிஸ்ட் தீவிரவாதிகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இந்த நிலையில் கடந்த 13 ஆம் திகதி முதல் முழு அடைப்புப் போராட்டத்திற்கும் அவர்கள் அழைப்பு விடுத்தனர் இந்தப் போராட்டம் வரும் 13 ஆம் திகதி வரை நீடிக்கும் என்றும் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். எதிர்க்கட்சியினரும் இந்தப் போராட்டத்தில் சேர்ந்து கொண்ட தால் நேபாளம் முழுவதும் குழப்ப நிலை நீடிக்கிறது.

முக்கிய நகரங்களில் சாலைப் போக்குவரத்து முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகள் அனைத்தும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இராணுவ வாகனங் கள் மட்டுமே வீதிகளில் காணப் படுகின்றன.

சரவாசி மாவட்டத்தில் தீவிரவாதிகள் ஒரு தொலைத் தொடர்பு நிலையம் மீது குண்டு வீசினார்கள். இதில் அந்தத் தொலைத்தொடர்பு நிலையம் முற்றிலுமாகச் சேதம் அடைந்தது இதில் இரண்டு பேர் காயமடைந்தனர். அந்த மாவட்டம் முழுவதும் தொலைத்தொடர்பு இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

முக்லிங்- நாராயண்காட் பகுதி களில் தீவிரவாதிகள் ஏழு பாரவூர்தி களுக்குத் தீ வைத்தனர். அதிலிருந்த பொருள்களும், முற்றிலுமாக எரிந்து சாம்பலானது.

அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்தத் துப்பாக்கிச் சண்டையில் பத்துத் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.டாங் பகுதியிலும் கடந்த இரண்டு நாட்களாக இரு தரப்பினருக் குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது. தீவிரவாதிகள் மற்றும் எதிர்க்கட்சியினரின் போராட்டம் தீவிரம் அடைந்துள்ள தைத் தொடர்ந்து வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்ட மன்னர் ஞானேந் திரா முடிவு செய்திருக்கிறார். வெளி நாட்டு சுற்றுப் பயணம் மேற்கொள்ள வும் திட்டமிட்டிருக்கிறார்.

# போப்பின் இறுதிச் சடங்கில் 30 நாட்டுத் தலைவர்கள், இருபது இலட்சம் கத்தோலிக்கர் கலந்துகொள்வர்


மறைந்த போப் இரண்டாம் ஜோன்போலின் இறுதிச் சடங்கில் 30 நாட்டுத் தலைவர்கள் 20 லட்சம் கிறிஸ்தவர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிச்சடங்குகள் வத்திக்கான் நகரில் நாளை மறுதினம் இத்தாலிய நேரப்படி காலை 10 மணிக்கு நடக்க விருக்கிறது. 30 நாட்டுத் தலைவர்கள் உட்பட 200 முக்கிய தலைவர்கள், 20 லட்சத்துக்கும் மேற்பட்ட கிறிஸதவ மக்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக வரலாற்றில் உலகத் தலைவர் ஒருவருக்கு இவ்வளவு பேர் திரண்டு அஞ்சலி செலுத்துவது ஒரு அபூர்வ நிகழ்வு என வர்ணிக்கப்படுகிறது.

அமெரிக்க சார்பில் அதிபர் ஜோஜ் புஷ் தலைமையில் அவரது துணைவியார் லாராபுஷ் உள்ளிட்ட குழு கலந்து கொள்ளவுள்ளது. வரும் வெள்ளிக்கிழமை தமது நீண்டநாள் காதலி கமீலா பார்க்கரை திருமணம் செய்ய இருந்த இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் திருமணத்தை ஒரு நாள் தள்ளிவைத்துவிட்டு போப் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வத்திக்கான் செல்வார் எனக் கூறப் பட்டுள்ளது. அதிபர் புஷ்சை பொறுத்தவரை அமெரிக்க அதிபர் பொறுப்பில் இருக்கும் ஒருவர் போப்பின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வது வரலாற்றில் இதுவே முதல் தடவை.

இந்த மனிதருக்காக (போப்) எல்லாம்வல்ல இறைவனுக்கு எனது நாட்டின் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவிக்க எனக்கு கிடைத்த அரிய பெருமை இது என்று இந்த வாய்ப்புக்குக் கருத்து தெரிவித்தார் புஷ். நேற்று முன்தினம் மதியம் முதல் வரும் வெள்ளி காலைவரை போப்பின் உடல் வத்திக்கான் சென் பீட்டர்ஸ் பசிலிகாவில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. முன்னதாக வத்திக்கான் அப்போஸ் தல மாளிகையில் இருந்து சென் பீட்டர்ஸ் பசிலிகாவுக்கு அவரது உடல் புனித ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. சிவப்பு அங்கி அணிந்த கார்டினல்கள் அவரது உடலை தோளில் சுமந்து சென்றனர்.

அவர்களுக்கு முன்பாக கிறிஸ் தவ சாமியார்கள் புனிதவேத சங்கீதம் ஓதியபடி சென்றார்கள். அவர்களின் குரலோசை முதலில் மாளிகையிலும். பிறகு பீட்டர்ஸ் சதுக்கம் முழுமை யிலும் கேட்கும் படி ஒலிபரப்பானது அப்போது போப் உடலை எதிர்பார்த்து காத்திருந்த லட்சக்கணக் கான மக்கள் கண்ணீர் மல்க கை யொலி எழுப்பினர்



இந்தோனேஷியாவின் நியாஸ் நகரில் பூகம்ப நிவாரண மீட்புப்பணிகளில் ஈடுபடும்போது அவுஸ்திரேலிய உலங்குவானூர்தி விபத்துக்குள்ளானதில் பலியான அவுஸ்திரேலியத துருப்பினர்களின் சடலங்களுக்கு அஞ்சலி செலுத்தும் ஆஸி. பிரதமர் ஜோன் ஹவாட், இந்தோனேஷிய சனாதிபதி, ஆஸி ஆளுநர் ஆகியோர்.

# சீனாவில் கடும் வரட்சியால் 90 லட்சம் மக்கள் தவிப்பு

சீனாவில் சில பகுதிகளில் கடும் வரட்சி நிலவி வருவதால் 90 லட்சம் மக்கள் குடிநீர் இன்றித் தவிப்பதாகத் தெரிவிக்கபட்டுகின்றது.

50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வரட்சி மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.விவசாயிகள் பாசனத்துக்குத் தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்யவில்லை எனவும், குளங்களும்,ஏரிகளும் வறண்டு போய்க் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.வடக்கு சீனாவில் வரட்சி சகஜமான ஒன்று. ஆனால் இந்த ஆண்டு தெற்கு சீனாவிலும் வரட்சி ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பின்லேடனுடன் பேச்சு நடத்தினேன்

## ஒப்புக் கொண்டுள்ளார் காதிர்கான்

(இஸ்லாமபாத்)

அணு ஆயுதங்களைக் கொண்டு அமெரிக்க நகரங்களைத் தகர்ப்பது குறித்துத் தீவிரவாத தலைவர் ஒசாமா பின்லேடனுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக பாகிஸ்தான் விஞ்ஞானி ஒப்புக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் தலைமை அணு விஞ்ஞானி அப்துல்காதிர்கான் அணு ஆயுத தொழில்நுட்பங்களை ஈரான் மற்றும் லிபியாவுக்கு விற்றது தொடர்பாக அப்பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார் பாகிஸ்தான்



அதிபர் முஷாரப் மன்னிப்பு அளித்ததால் காதிர்கானுக்கு வழங்கப்பட இருந்த மிகப்பெரிய தண்டனை ரத்துச் செய்யப்பட்டது.

காதிர்கானைத் தொடர்ந்து அவரது சகாக்கள் பலரும் அணு ஆயுதங்கள் தொடர்பான ரகசியங் களை மற்றவர்களுக்கு தெரியப்படுத் தியுள்ளது விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

காதிர்கானுக்கு நெருக்கமான விஞ்ஞானி சுல்தான் பஷீருதீன் மெஹ் மூத்திடம் அமெரிக்க புலனாய்வுத் துறை அதிகாரிகள் இஸ்லாமபாத்தில் உண்மையைக் கண்டறியும் கருவியைக் கொண்டு பரிசோதனை நடத்தினர். அப்போது பஷீருதீன் அணு ஆயுதங்களைக் கொண்டு அமெரிக்க நகரங்களைத் தகர்ப்பது குறித்து தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடனுடன் விவாதித்தோம் எனக்கூறினார்.

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்

# முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

## மருந்துச் சிட்டைகளுடன் நோயாளர் வெளியேறும் அவலம்


(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முக்கியமான சில மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதன் காரணமாக சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் மேற்படி மருந்து வகைகளைத் தனியார் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மருந்துகள் குறித்த சிட்டையினை மருத்துவர்கள் வழங்கி வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.**

குறிப்பாக, உயர் குருதி அழுத்தத்திற்குப்பாவிக்கப்படும் மினிபிறிஸ், நிப்பிடிப்பின், அட்ரோவஸ்ராரின், குத்துளைவிற்குப் பாவிக்கப்படும் வோல்ட்டரின், முட்டு நோய்க்குப் பயன்படுத்தப்படும் பெக்லமெத சோல்ட், சல்மெற்ரோல், மனநோய்க்கான ஒலனசிப்பின் மற்றும் பீகோ போன்ற மருந்து வகைகள் மாவட்ட வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தில் முற்றாகக் கையிருப்பு முடிந்த நிலையில் மேற்படி நோய்க்கென சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் அங்கு நோய்க்கேற்ப மருந்தின்மை காரணமாக அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

மற்றும் மாவட்டத்தில் பாம்புக் கடிக்கிலாக்காகி வருகின்றவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளமையின் காரணமாக வைத்தியசாலையில் பாம்புக் கடிக்கான மருந்து (ஏ.எஸ்.வி.) கையிருப்பில் குறைந்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

அதேபோன்று குடல் சம்பந்தமான நோய்க்கான அல்ற்றொக்ஸ், ஒமிபிரேசோல் ஆகியவற்றிற்கும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தெரிய வந்துள்ளது. மாவட்ட வைத்தியசாலையினால் சுகாதார அமைச்சின் மத்திய மருந்தகத்திடம் கால் ஆண்டுக்கான மருந்து வகைகளின் கோரலின்போது அமைச்சினால் சில முக்கியமான மருந்து வகைகள் குறைந்த அளவில் அனுப்பி வைக்கப்பெற்றமையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளது. (சோ)



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற புதிய ஆசிரியப் பயிலுநர்களை வரவேற்கும் நிகழ்வில் பீடாதிபதி க. போனாட் மங்கல விளக்கேற்றுவதனைப் படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு : ஆறு சுபாஸ்கரன், வவுனியா செய்தியாளர்)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் குரவில் தமிழ் வித்தியாலயம்

(அலுவலக செய்தியாளர்)

உடையார் கட்டு குரவில் தமிழ்வித்தியாலயம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் கடந்த எட்டுவருடங்களாக பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கிவருகின்றது.

1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரையான வகுப்புக்களை உள்ளடக்கியுள்ளது. இப்பாடசாலையில் அடிப்படை வசதிகளான கிணறு, மலசலகூட வசதி என்பனவற்றுடன் ஆசிரியர்ஓய்வு விடுதி, தங்குமிட வசதி மற்றும்கட்டட வசதி என்பன இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர் கொண்டு வருகின்றது.

பாடசாலை வளாகத்தில் குடிநீர்க் கிணறு இன்மையால் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு வெளியே சென்று குழாய்க்கிணறு ஒன்றிலேயே நீரினை பெறுகின்றனர். அது போல் மலசலகூட வசதியும் இல்லை. அதனால் பாரிய இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். மேற்கூறப்பட்ட தேவைகள் அனைத்தையும் ஓரளவேனும் நிவர்த்தி செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாடசாலை சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (கு)

# தமிழகத்திலிருந்து 24 அகதிகள் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்

(மன்னார்)

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் 24 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்தியாவின் ஈரோடு, சேலம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள பவானிக்கார், ஆனையூர்,பெருமாள்புரம்,தாரையூற்று ஆகிய அகதி முகாம்களில் வசித்து வந்த தமிழ் அகதிகளே இவ்வாறு தாயகம் திரும்பியவர்களாவர். இவர்களில் 13 ஆண்களும், 11 பெண்களும் அடங்குவர்.

இராமேஸ்வரத்திலிருந்து அழைத்து வரப்பட்ட இவர்கள் தலை மன்னார் மணற்திடலில் இறக்கி விடப்பட்டுள்ளனர். இதனையடுத்து இவர்களை இலங்கை கடற்படையினர் தமது படகில் ஏற்றி வந்து தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்தனர். தலைமன்னார் பொலிசார் இவர்களை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய வேளை மன்னார் நீதிபதி அவர்களை அவர்களது சொந்த இடங்களான கிளிநொச்சி,விநாயகபுரம் வேலணை கிழக்கு, யாழ்ப்பாணம், புங்குடுதீவு, வவுனியா போன்ற இடங்களுக்கு அப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள் மூலம் அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (18)

# கலைச்சுடர் சனசமூக நிலைய கட்டடத்திறப்பு விழா

(வட்டக்கச்சி)



படம் ரூபன்

வட்டக்கச்சி இராமநாதபுரத்தில் தற்போது புதிதாகஅமைக்கப்பட்ட கலைச்சுடர் புதிய சனசமூக நிலையத்தின் கட்டடத்திறப்பு விழாவானது நேற்று முன்தினம் தலைவர் சு.இரவீந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கலந்து கொண்டார். நிகழ்விற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மற்றும் போராளிகள், பொது மக்கள் அனைவரும் சனசமூக நிலையத்தின் முன்புறமாக இருந்து ஆலடி முன்பள்ளிச் சிறார்களின் அசைவும் இசைவும் நடனத்துடன் அழைத்து வரப்பட்டனர், மங்கல விளக்கினை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் இளமுருகனும், கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் ச.நாகேந்திரம், சமாதான நீதவான் க.தர்மசூரியர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை வட்டக்கச்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடரும், அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை கிளி. கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிறியும் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து சனசமூக நிலையததிற்கான பெயர்ப்பலகையினை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உஷா திரைநீக்கம் செய்து வைக்க, புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டடத்தினை யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் திறந்து வைத்தார். தலைமை உரையைத் தொடர்ந்து கருத்துரையினை இராமநாதபுரம் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் நாகேந்திரமும், சிறப்புரையினை கிளி.கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சிறியும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உஷாவும் பிரதம விருந்தினரான யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோரும் நிகழ்த்தினார்கள். நன்றி உரையினை சனசமூக நிலையச செயலாளர் அரவிந்தன் நிகழ்த்தினார். (12)

# குறைந்த செலவில் நவீன கட்டுமானம்: இன்று செயல்விளக்க நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

குறைந்த செலவில் தரமான வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பான நவீன கட்டுமான தொழில்நுட்ப செயல்விளக்க நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி 155 ஆம் கட்டை அறிவியல் நகரில் நடைபெறவுள்ளது.

வடகிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்ட அனுசரணையுடன் கொழும்பிலிருந்து வருகை தரும் இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினால் பொது மக்களுக்கு மேற்படி செயல்முறை விளக்கத்தினை இந்நிகழ்வில் வழங்கவுள்ளனர்.

குறைந்த செலவில் வீடுகளை விரைந்து நிர்மாணிப்பதற்கான நவீன கட்டுமானத் தொழில் நுட்பத்தினை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் வகையில் இச்செயல்விளக்கம் இடம் பெறவுள்ளது.

நிர்மாணத்துறையில் ஆர்வமுடையோர் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் கட்டடப் பொருள் விற்பனையாளர்கள், கட்டட நிர்மாணத் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் நிர்மாணத்துறையில் ஆர்வமுடையோரை மேற்படி செயல்முறை விளக்கத்தில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட தகவல் கல்வித் தொடர்பாடல் நிபுணர் சி. வன்னியகுலம் வேண்டியுள்ளார். (சோ)

# நீர்த்தாங்கி வாகனம் "யுனிசெப்" அன்பளிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

புதிய நீர்த்தாங்கிவாகனம் ஒன்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனைக்கு யுனிசெப் நிறுவனத்தால் நேற்று முன்தினம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சுனாமிக்கு பின்னர் யுனிசெப் நிறுவனத்தால் நான்கு நீர்த்தாங்கி வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு வாகனங்கள் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனைக்கும் இரண்டு வாகனங்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வழங்கப்பட்ட நீர்த் தாங்கி வாகனங்களை நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் அவர்களிடம் யுனிசெப் நிறுவனத்தின் வன்னிக்கான வதிவிடப்பிரதிநி வெனிபுறா கையளித்தார். மேலும் முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனைக்கு கழிவுகள் அகற்றும் வாகனம் ஒன்று மிகவிரைவில் யுனிசெப் நிறுவனத்தால் வழங்கப்பட உள்ளதாக வெனிபுறா தெரிவித்தார். (கு)



நிரந்தர நியமனம் வழங்கக் கோரி முல்லைத்தீவு வலய தொண்டர் ஆசிரியர்கள் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பில் நடத்திய பேரணியின் முடிவில் வலயக் கல்விப் பணிமனைவளாகத்தில் கூடி நிற்பதனையும், வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி மகஜர் கையளிப்பதனையும் படங்களில் காணலாம்:- (படம்:- தவரட்ணம்)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# யாழ். வீதிகளை அகலமாக்கத் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த ஏதுவாக பிரதான வீதிகளை அகலமாக்கி இரு தடப்பாதையாக்கும் திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.**

புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் பின்னரான சமாதான காலத்தில் குடாநாட்டில் என்றுமில்லாத வகையில் வாகனப்பயன்பாடுகள் அதிகரித்துள்ளன.

எனினும் அதற்கேற்ற வகையில் குடாநாட்டின் வீதிகள் விஸ்தரிக்கப் படாமையினாலும், அபிவிருத்தி செய்யப்படாமையினாலுமே விபத்துக் கள் பெருமளவில் இடம்பெற்றுவரு கின்றன.

பொது மக்களிற்கு சொந்தமான வாகனங்களுடன் தென்னிலங்கை யிலிருந்து வரும் வாகனங்களும் படையினரது வாகனங்களும் இவ் விபத்துச் சம்பவங்களுடன் பெரிதும் தொடர்புபட்டுள்ளன.

குடாநாட்டில் நாற்பதாயிரத்திற் கும் அதிகமான படையினர் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளனர். அதிலும் கணிசமானோர் தென் மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கின் முன்னரங்க நிலைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ளனர். இப்படையின ருக்கான விநியோக நடவடிக்கையும் படைவாகனங்கள் மூலமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறானதோர் சூழலில் படையினரதும்,பொதுமக்களினதும் வாகன விபத்துக்களைக் கருத்தில் கொண்டே வீதிகளை இரு தடப்பாதை திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கூட்ட மொன்று நாளை யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (33)

# தொடர்மழை காரணமாக இடம் பெயர்ந்தோர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது பரவலாகப் பெய்துவரும் மழை காரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும் நெருக்கடிகளுக்குள்ளாகி யிருக்கின்றனர்.

குறிப்பாக அளவிற் சிறியதாகவுள்ள தற்காலிக வீடுகளிலும் நண்பர்கள், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வரும் மக்கள் இவ்வாறான நெருக்கடி நிலைமைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைவிட இவர்கள் தற்காலிகமாக வாழ்ந்து வரும் இடங்களில் அடிப்படை வசதிகள் மிகக் குறைவாகக் காணப்படுவதாலும் நெருக்கமான முறையில் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டிருப்பதாலும் இவ்வாறான மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளனர். (33)

# பாடசாலைகளை இடம்மாற்ற 536 மில்லியன் தேவை என மதிப்பீடு!

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் கரை யோரப் பாடசாலைகளில் இனங் காணப்பட்ட பாடசாலைகளைப் பாது காப்பான இடங்களிற்கு இடமாற்றம் செய்ய சுமார் 536 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற் றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, கட்டைக் காடு மற்றும் தாழையடி றோமன் கத்தோலிக்கத் தமிழ்கலவன் பாடசாலைகள், மாமுனை அ.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், ஆழியவளை றோ.க.பாடசாலை களே இடமாற்றஞ்செய்ய முடிவு செய்யப்படடுள்ளது.

இவற்றுடன் வடமராட்சி வடக்கின் வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம் மற்றும் வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையுமாக எட்டுப்பாட சாலைகளே தற்போது சொந்த இடத்திலிருந்து இடமாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இறுதிப்பகுதியில் யாழ்.செயலகத்தினால் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இடைக்கால நிர்வாக முகாமைத்துவக் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இச் சந்திப்பில் கல்விப்பணிப்பாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பணிகளுக்கான நிதி ஒருக்கீடு களை ஜேர்மனிய தொழில் நுட்ப அமைப்பும், சுவிஸ் தொண்டமைப் பான எஸ்.டி.சி.மற்றும் யுனிசெப் ஜெய்கா ஆகியவை வழங்க முன்வந்துள்ளன. (27)

## - யாழ்.பல்கலை. பெண்கள் விடுதியருகில் -

# கழிவுப்பொருட்களைக் கொட்டுவதால் துர் நாற்றம் வீசுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு அருகில படையினரால் மாமிசக்கழிவுகளும் குப்பைகளும், கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர் நாற்றம் வீசுகின்றது.

இதனால் விடுதியில் தங்கியுள்ள மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கும் அரசடி, வீதிக்கும் இடையில் உள்ள பழைய புகையிரத வீதியில் தற்பொழுது தற்காலிக குப்பைகள் கொட்டும் இடமாக மாநகர சபை பயன்படுத்தி வருகின்றது. இங்கு தேங்கும் குப்பைகள் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே அகற்றப்பட்டு வருகின்றது.

இதனால் இப்பகுதியின் சூழல் பாதிக்கப்படுவதாகவும் நாள்தோறும் குப்பைகளை அகற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பதுடன், தற்காலிக குப்பைகள் கொட்டும் இடத்தை மக்கள் நடமாட்டமில்லாத இடத்திற்கு மாற்றும் படியும் இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (28)

# "கூட்டுறவுக் கருவூலங்கள்" நூல் வெளியீட்டு விழா

(நல்லூர்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முன்னாள் பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி அதிபர் இ.சுப்பிரமணியத்தினால் எழுதப்பட்ட "கூட்டுறவுக்கருவூலங்கள்" என்னும் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச்சங்கப் பதிவாளருமான இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (41)

# வேலணை கடற்படைத்தளப்பகுதியில் படையினரால் பனைமரங்கள் தறிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் உள்ள வேலணை கடற்படைத்தளத்தை அண்டியுள்ள பகுதிகளில் இருக்கும் தனியார் காணிகளில் காணப்படும் பனைமரங்கள் கடற்படையினரால் தறிக்கப்பட்டு வருகிறன.

மேற்படி பகுதியிலிருந்து தறிக்கப்படும் பனைமரங்கள் குற்றிகளாக்கப்பட்டு தீவகத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் படைமுகாம் பலப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காக இராணுவ உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றன. படையினரது இந்நடவடிக்கை குறித்து அப்பகுதியில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# படையினரின் நாய்களால் பொதுமக்களுக்குப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் பகுதியில் படையினரால் நிறுவப்பட்டுள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் வளர்க்கப்படும் நாய்கள் அவ்வப்போது பாதுகாப்பு வலயத்தை விட்டு வெளியேறி மக்களின் குடிமனைகளுக்குள் புகுந்து மக்களையும், கால்நடைகளையும் கடித்துக்குதறித் துன்புறுத்துவதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். குறிப்பாக வலிகாமம் பாதுகாப்பு வலயத்தை அண்டியுள்ள புன்னாலைக்கட்டுவன்,வளலாய், பொன்னாலை, சுழிபுரம், மூளாய், தெல்லிப்பழை போன்ற பகுதிகளிலேயே இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. (33)

# யாழ்.சிறிலங்காப் படையினருக்கு மனித உரிமை அறிவூட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் படையினரி டையே ஏற்படுத்துவதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ்.அலுவலகம் முழுவீச்சில் செயற்பட்டு வருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இதுவரை 12 வெவ்வேறான பயிற்சிப்பட்டறை களை சிறிலங்கா இராணுவத்தின ருக்கு தாம் நடாத்தியிருப்பதாக ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி.றுவன் சந்திரசேகர தெரிவித்தார்.

குடாநாட்டின் வெவ்வேறு பகுதி களிலும் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தின் படைப் பிரிவுகளின் சிரேஷ்ட அதிகாரிக ளிற்கே மனித உரிமைகள் தொடர் பான அறிவூட்டல் வகுப்புகள் நடாத் தப்பட்டுள்ளன.

"குறிப்பாக மனித உரிமைகள் என்பதுடன், சிறுவர்களது உரிமை கள் தொடர்பாகவும் படைத்தரப்பிற் கும் ஏனையவர்களிற்கும் புரிந்து கொள்ளவைப்பதே ஆணைக் குழுவின் இப்பயிற்சிப்பட்டறைக் கான நோக்கம்'' என மேலும் ஆர்.பி.றுவன் சந்திசேகர தெரிவித் தார்.

இதேவேளை படைத்தரப்பை தவிர்த்து, குடாநாட்டில் நிலை கொண்டுள்ள பொலிசாருக்கும் மனித உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்பட்டுவரு கின்றது. இதுவரை பொலிசாருக் கான 14 பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த வாரம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் இவ்வாறான பயிற்சிப்பட்டறை யொன்றை நடாத்தியுள்ளது.

இவற்றுடன் யாழ்.சிறைச்சாலை பணியாளர்களிற்கும்,தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை, மனிதஉரிமைகளுடன் தொடர் புடைய அமைப்புக்களிற்கும் இவ் வாறான பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. (27)

# கால்நடை வளர்ப்போரின் தொழில் தரம் மேம்படுத்தல்

(வட்டுக்கோட்டை)

யாழ்.வட்டுக்கோட்டை கால் நடை வளர்ப்போர் கூட்டுற வுச்சங்கத் தின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு களில் ஈடுபடுவோரின் தொழிற்தரம் மேம்படுத்தப்படவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இப்பகுதி கால்நடைவளர்ப்போரினது பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகுமென கால்நடைவளர்போர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (33)

# பிணமுருங்கை மயான வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்புப் பிரதேச மக்கள் பிணமுருங்கை இந்து மயானத் திற்குச் செல்லும் அம்மன் வீதியைப் புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வீதி கடந்த பல வருடங் களாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளதால் இவ்வீதியை பயன்படுத்துவோர் பெரும் சிரமங் களுக்குள்ளாகின்றனர்.

எனவே இதனை உடனடியாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ள மக்கள் இது குறித்து சாவகச்சேரி பிரதேச சபையில் முறைப்பாடும் செய்துள் ளனர். (33)

# சிறுவர் பாதுகாப்பு நிலையங்களை பதிவு செய்யுமாறு நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இதுவரையில் பதிவு செய்யப்படாத சிறுவர் பாதுகாப்பு நிலையங்களை எதிர்வரும் மே மாதம் ஏழாம் திகதி நீதிமன்றத் துக்கு வந்து பதிவுகளை மேற் கொள்ளுமாறு யாழ். மேலதிக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


குடாநாட்டிலுள்ள பல சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் உரிய பதிவுகளைச் செய்யாதது தொடர்பா கத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணைகள் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றபோது யாழ்.மேலதிக நீதிமன்ற நீதிபதி ஶ்ரீநிதி நந்தசேகரம் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் சிறுவர் பாதுகாப்புக் குழுவினினால் தாக்கல் செய்யப்பட்டி ருந்த இந்த வழக்கில் குடாநாட்டி லுள்ள பலசிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் உரிய பதிவுகளை மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படாததன் காரண மாகவே பல சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதி ஶ்ரீநிதி நந்தசேகரம் யாழ்.குடாநாட்டில் மொத்த மாக 56 சிறுவர் பாதுகாப்பு இல்லங்களும், 16 சிறுவர் தங்கு மிடங்களும் இருப்பதாகவும் இவற்றில் ஒன்பது இல்லங்கள் மட்டுமே உரிய பதிவுகளைச் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார். இதன் காரணமாகவே பல்வேறு அசம்பாவிதங்கள் இடம் பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே இதுவரையில் உரிய பதிவுகளை மேற்கொள்ளாத சிறுவர் இல்லங்கள் அனைத்தும் எதிர்வரும் மே மாதம் ஏழாம் திகதியன்று உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்துக்கு வந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். (33)



பகுதி–46

**இப்படியான துயரத்தை பேரிழப்பை எங்களால் பார்த்துப் பொறுக்க முடியாமல் இருந்தது. பச்சிளம் பாலகர்கள் சிறுவர்கள், பெண்கள்,ஆண்கள் என பெருந்தொகையானவர்களை சில மணிகளில் நாங்கள் இழந்திருப்பது இதுதான் முதல்தடவை. உடல்கள் இருந்த கோலத்தை பார்க்கின்ற பொழுது தாங்கிக்கொள்ள முடியாத நிலைதான் இருந்தது. இவற்றைப்பார்த்து வேதனைப்படுவதை விட மேலான பொறுப்பு எங்களிடம்தான் இருந்தது. அதனால் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளில் இறங்கினோம். சம்பவம் பற்றிய அறிவித்தல் வழங்கப்பட்ட சில மணிநேரங்களுக்குள் மீட்பு நடவடிக்கைகளுக்கு உடனடியாக தேவைப்பட்ட அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுவிட்டதென சுனாமி கடல் புவிநடுக்கத்தால் ஏற்பட்ட பேரலைகளால் உருக்குலைக்கப்பட்ட முல்லைத்தீவில் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தமிழீழ நிதித்துறையின் தள அமைப்புப் பொறுப்பாளர் மணிமாறன் தனது அனுபவத்தை பகிர்ந்திருந்தார். அவர் பகிர்ந்தவை இந்தப் பகுதியில் வருகிறது.**



# இழப்புக்களைப் பார்த்து வேதனைப்படுவதை விட மேலான பொறுப்பு எங்களின் கரங்களில் இருந்தது

*அன்றைய தினம்* எங்களுடைய வாகனம் மந்துவில் பகுதியில் இருந்த தகரப்பந்தலை ஏற்றிவருவதற்காகப் போயிருந்தது. இப்படிப்போன வாகனத்தின் சாரதி எங்களுடன் தொடர்பு கொண்டு "முல்லைத்தீவில் உள்ள குடிமனைகளுக்குள் கடல் புகுந்துவிட்டதாம். சனங்கள் எல்லாம் கைக்குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்துகொண்டிருக்கினம். ஆக்களை ஏற்றி அனுப்பட்டா" என்று கேட்டார்.

சம்பவம் நடைபெற்றவேளை நான் வீட்டில் தான் இருந்தேன். அதனால் என்னிடம் வாருங்கள் நானும் வருகிறேன் என்று கூறி அவர் வந்ததும் உடனடியாகவே புறப்பட்டு முல்லைத்தீவை நோக்கிப்போய்க் கொண்டிருந்தோம்.

வட்டுவாகல் பாலத்தை நாங்கள் போய்ச் சேருகின்ற பொழுது முதலாவது அலை அடித்து முடிந்து இரண்டாவதுஅலையும் வந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது அலை பனைமரங்களையும் பிடுங்கி சுத்திக் கொண்டுவந்தது.

இப்படி வந்தஅலை வட்டுவாகல் தொடுவாய் முகப்புக்கு முன்னால் கடலுக்குள்ளேயே எழும்பிவிட்டது. எங்களுக்கு எல்லாம் புதிய அனுபவமாய் இருந்தது.அந்தக் காட்சி மிகப்பெரிய பயங்கரமானதுதான். ஆனாலும் நங்கள் அதை வியப்பாய்தான் பார்த்தோம். இவ்வளவும் அழிந்துபோய்விட்டது. எனி எதற்குப் பயப்பட வேண்டும் என்ற மனநிலையில் பாலத்துக்கருகில் நின்றோம்.

இதற்கிடையில் முதலாவது அலைக்கு அடித்துச்செல்லப்பட்ட ஐயா ஒருவர் உடுப்புக்கள் எதுவும் இல்லாத நிலையில் கரையை வந்து சேர்ந்தார். அந்த ஐயா "தம்பி நான் பாலத்தடியில நிண்டனான் கடல் வந்து என்னை அடிச்சுபாலத்துக்க விழுத்தி இழுத்துக்கொண்டு போய்ச்சுது. நான் ஒருமரத்தில பிடிச்சுத்தான் தப்பினனான்" என்றார்.

இரண்டாவது அலை வரும்போது கடற்கரையில் இருந்த பெரிய பனை மரத்தைக் கரையில் எந்த நிலையில் நின்றதோ அதேமாதிரிப் பாலம் வரைக்கும் கொண்டு வந்து பாலத்தின் மீது மோதி சாய்ந்து விழுத்தியது. கடலின் வேகம் அந்தளவுக்கு இருந்தது.

## முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

கடல் அடிச்ச கொஞ்சநேரத்தில் தண்ணி திரும்பி கடலைநோக்கிப் போய்விட்டது. அந்த இடைவெளியைப்பயன்படுத்தி வட்டுவாகல் பாலத்தைத்தாண்டி உள்ளுக்குப் போய் விட்டோம்.

நாங்கள் செல்வபுரம் வீதியால் தான் போய்க் கொண்டிருந்தோம். செந்தளிர் சிறுவர் இல்லத்துக்குப்பக்கத்தில் உள்ள பாலத்தால் போகமுடியாமல் போய்விட்டது. இந்த நிலையில் நிதித்துறைப்பொறுப்பாளர் தமிழ்க்குமரன் அண்ணாவும் வந்துவிட்டார்.

நிலைமை மோச மானதாக இருந்தது. சடலங்களை மடியில் வைத்தவாறு மக்கள் கதறி அழுது கொண்டிருந்தனர். நடக்க முடியாத ஆக்கள் எல்லாம் வீதியில் இருக்கிறார்கள். பலர் ஆடைகள் இல்லாமல் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் நிதிப்பொறுப்பாளர் தமிழ்க்குமரன் அண்ணா நிதித்துறையின் வாணிபங்கள் சேரன், சோழன், பாண்டியன், நகைவாணிபம், வழங்கல்பகுதி, ஆளுகைப் பகுதி, பெருந்தோட்டப்பகுதி, கனரகப்பிரிவு, கொள்வனவுப்பகுதி உட்பட்ட நிதித்துறையின் வாகனங்கள் அனைத்தையும் கொண்டு வருமாறு அறிவித்தார்.



அதனை அடுத்து எல்லா வாகனங்களும் வந்துவிட்டன. அதனுடன் சேர்ந்து அனைத்துப்பிரிவுப் பொறுப்பாளர்களும் வந்து விட்டார்கள்.

நாங்கள் எதிர்பார்த்தைவிட வாகனங்கள் வேகமாக வந்துவிட்டன. ஆனால் பாதைகள் சீர் இல்லாததால் உடனடியாகப் பயன்படுத்த முடியாமல் இருந்தது. எங்களுடைய வாகனங்கள் எல்லா இடங்களிலும் நின்றதால் வட்டுவாகலால் தான் உள்ளே போகவேணும் என்ற தேவையிருக்கவில்லை. அதனால் முள்ளியவளை பக்கத்தில் இருந்தும் வாகனங்கள் பணியில் இறங்கிவிட்டன.

உள்ளுக்குப் போய்வரக்கூடிய டாட்டாரக் வாகனங்களைக் கொண்டுபோய் இயன்ற அளவு மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

இப்படியே எங்களது வேலை ஒரு பக்கத்தால் நடைபெற்றுக்கொண்டிருக்க புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் புலனாய்வுப் பிரிவுப் போராளிகளுடன் முல்லைத்தீவு ரவுனுக்குள் போய் நிலைமையைப் பார்த்து பிரச்சினைகளைச் சீர் செய்து ரவுணுக்குள் இருந்த புலனாய்வுத் துறையினரும் சேந்து நடவடிக்கைகளை ஒழுங்குபடுத் தினார்கள்.

உள்ளுக்கு வாகனங்களைக் கொண்டு வர முடியாத நிலை இருந்தது. அதனால் அங்கு நின்ற நியாப் வாகனம் ஒன்றை அமைதியுடன் எடுத்து காயப்பட்டவர்களை ஏற்றி இறக்கிக் கொண் டிருந்தோம். இறந்தவர்களை எடுப்ப தைவிட காயப்பட்டவர்களையும், குற்றுயிராய் கிடந்த வர்களையும் தான் உடனடியாக மீட்டோம்.

இந்த வாகனத்தை நாங்கள் போவதற்கு முன்னர் புலனாய்வுத்துறையினர் பயன்படுத்தி மீட்பு வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். நாங்கள் போனதும் அவர்கள் அந்த வாகனத்தை எங்களிடம் தந்தனர்.

அதன் பிறகு நாங்கள் அதில் மீட்பு வேலைகளைச்செய்து கொண்டிருந்தோம். ஒரு இடத்தில் கர்ப்பிணித்தாய் ஒருவரை மயக்கமடைந்தநிலை யில் மீட்டு நிதித்துறை யின் புதுக்குடியிருப்பு வாகனப்பகுதிப் பொறுப்பாளர் தமிழ்மாறன் அவரை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு போனார்.

இப்படியே முதல்நாள் வேலைகள் நிறை வடைந்து போயிருந்தது. அன்று மாலை நிதிப்பொறுப்பாளர் எங்கள் அனைவரையும் கூப்பிட்டு வேலைகளைப் பிரித்து



ஒழுங்கு செய்திருந்தார்.

அடுத்த நாள் காலை கனரகப்பிரிவு வாகனங்கள் தள அமைப்புப்பகுதி வாகனங்கள், தமிழீழ வைப்பக வாகனங்கள் என வாகனங்கள் வந்து சேர்ந்திருந்தன. வைப்பக வாகனங்கள் வெள்ளாங்குளத்திலிருந்து கூட வந்திருந்தன.

சூசை அண்ணா அனைத்துப் பிரிவுப் போராளிகளையும் கூப்பிட்டு கதைத்து மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தினார். அந்தக்கூட்டத்தில் புலனாய்வுத் துறை, படை அறிவியல் கல்லூரி பெண் போராளிகள், ராதா வான்காப்புப் படையணி, கடற்படைப் போராளிகள், சாள்ஸ் அன்ரனி, ஜெயம் அண்ணாவின் போராளிகள், தலைமைச் செயலகப் போராளிகள் என அனைவரும் கலந்து கொண்டிருந்தனர்.

மீட்பு நடவடிக்கைகளில் எல்லோருமே கஷ்ரப்பட்டுத் தான் வேலைசெய்தார்கள். ஆனாலும் பெண்போராளிகள்தான் அதிகம் கஷ்ரப்பட்டார்கள். மோசமாக பாதிப் படைந்துபோய் இருந்த உடல் களைக் கூட இடுப்பளவு தண்ணீருக்குள்ளால் நின்று மீட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாட்கள் நகர நகர உடல்கள் பழுதடைந்து கொண்டிருந்தது. உடல்களை கையால் பிடிக்க முடியாத நிலை இருந்தது. கையால் பிடித்து தூக்குகின்றபொழுது சிதைவடைந்துபோனது. உடல்கள் உரித்த மரவள்ளிக் கிழக்கு எப்படி இருந்ததோ அதைப் போல இருந்தது. அவற்றை எல்லாம் மீட்டெடுத்தோம்.

இடிந்த கட்டடங்களை அகற்றி அதனுள் இருக்கின்ற உடல்களை மீட்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் கனரக வாகனப் பகுதிக்குப் பொறுப்பாய் இருந்த அன்பரசன், ரகுநாதன் அண்ணா ஆகியோர் நின்று அந்த வேலைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். கனரக வாகனப் பகுதியின் பங்கு மிக முக்கியமானதாக இருந்தது. சில இடங்

**அ.லோகீசன்**

களில் பற்றைகளுக்குள்ளும், பனைவடலிகளுக்குள்ளும், கஞ்சல்களுக்குள்ளும், தண்ணீர்க்குள்ளும் இருந்த உடல்களை கனரக வாகனங்களை வைத்து மீட்கவேண்டிய நிலையும் உருவானது. அதனால் அவற்றுக்கெல்லாம் கனரக வாகனங்களையே பயன் படுத்தினோம்.

நாங்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபொழுது ஓரிடத்தில் பெரிய தென்னைமரம் விழுந்திருந்தது. அந்த மரத்தடிக்குப் போய்ப்பார்த்தோம். அதன் கீழ் நசிந்தபடி நான்கு பேரின் உடல்கள் இருந்தன. அந்த உடல்களை உடனடியாக மீட்க வேண்டும் என்ற தவிப்பு எங்களுக்கு இருந்தது. இருந்தும் முடியாமல் போய்விட்டது.

அதன் பிறகு எங்களது கிறேன் ஒன்றை நகர்த்தி வந்து அந்தத் தென்னை மரத்தைத் தூக்கித்தான் அந்த நான்கு உடல்களையும் மீட்டோம். அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள். ஒருபுறம் தண்ணீரின் தாக்கம். மறுபுறம் என்ன நடக்கிறது என்பதே தெரியாத ஏக்கம். இதற்கும் மேலாக தென்னையின் கீழ் நசியுண்ட வேதனை .அப்படித் தான் அவர்களது உயிர் பிரிந்திருக்கும். என்று தனது துயரமான மீட்பு அனுபவத்தைப் பகிர்ந்தார் நிதித்துறை தளஅமைப்புப் பொறுப்பாளர் மணிமாறன்.

அவர் பகிர்ந்ததன் தொடர் அடுத்த பகுதியிலும் வரும்.

தொடரும்....

# 28.03.2005--03.04.2005





**28:**

* அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட பத்துப்பேர் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் தாக்கியதில் படுகாயம்.


* வவுனியா வைரவப்புளியங்குளத்தில் உள்ள அரசியல்துறைச் செயலகம் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் வீச்சில் மூன்று பேர் காயமடைந்தனர்.

* புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அரசு தொடர்பாக சிறிலங்கா அரசு உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனக்கோரி வடமராட்சியில் கண்டனப் பேரணி இடம் பெற்றது.



* நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சூல்ஹெய்மிடம் புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிற தாக்குதல் குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் விசனம் தெரிவிப்பு.

* சுனாமி பேரலைகள் தமிழர் தாயகத்தைத் தாக்கலாம் என்ற தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பான இடம் நோக்கி நகர்வு.



* தமிழீழ அரசியல் விவகார குழுவில் அங்கம் வகித்து சர்வதேச நாடுகளில் பல சந்திப்புகளில் கலந்துகொண்டு விட்டு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் வன்னி திரும்பினார்.

**29:**

* அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் போராளிகளை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர் சென்று பார்வையிட்டார்.

* வவு.மாவட்ட அரசியல்துறையினருக்கும், மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குமிடையில் சந்திப்பு இடம் பெற்றது. இதன் போது கடந்த 28 ஆம் திகதி வவு.அரசியல்துறைப் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.


* அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், ஆலையடிவேம்பு பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு.



* ரஷ்யாவின் கூட்டுப்படைத் தளபதி யாழ்.விஜயம்.

* தங்கவேலாயுதபுர அரசியல்துறைப் பொறுப்பாளர் மீது அதிரடிப்படையினர் தாக்குதல்.

* பின்லாந்தில் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஆசியாவிற்கான தூதுவர் மிக்கோ பைகலா தலைமையிலான குழுவினரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு.



**30:**

* ஆண்களுக்கான உளவளத்துணை நிலையம் "சந்தோஷம்" அக்கராயனில் திறப்பு.



* அக்கராயன் ஆரோக்கியபுரத்தில் அமைக்கப்பெற்ற "அன்பு" தாய்சேய் போசாக்கு நிலையத்தின் புதிய கட்டடம் திறப்பு.




* திருக்கோவில் பகுதியில் இரண்டாவது நாளாகவும் ஹர்த்தால் அனுஷ்டிப்பு.

* சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு மற்றும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களின் வன்முறைகள் குறித்து பின்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் எர்கி துமியோஜா உள்ளிட்ட குழுவினரைப் பின்லாந்து அமைச்சகத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.



**31:**

* தமிழ்மக்கள் மீதான சிறிலங்கா அரசின் போக்கு மற்றும் தற்போதைய அரசி யல் சூழ்நிலை தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் பின்லாந்து மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிக்கு விளக்கினார்.

* போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே சந்திப்பு இடம்பெற்றது.

* தந்தை செல்வாவின் நினைவு தினம் யாழ். கோட்டையிலுள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் இடம்பெற்றது.

* மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வாகரை மக்கள் பேரணி நடத்தினர்.

**01:**


மட்டு. கொம்மாந்துறையில் இனம் தெரியாதோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை.

* மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு போராளிகள் வருகைதந்த வாகனத்தில் துப்பாக்கி ரவைகளை போட முயன்ற இராணுவச் சிப்பாய் புலிகளால் அவதானிக்கப்பட்டுக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைப்பு.

* ஏ-9 நெடுஞ்சாலையில் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி.

* அம்பாறையில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைய வந்த சிறுமி யுனிசெப்பிடம் ஒப்படைப்பு.

* கிளிநொச்சியில் பொறியியல் ஆய்வு கூடம் திறப்பு.



* தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் இத்தாலியில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து பாப்பரசரின் உடல் நலக் குறைவு குறித்து தேசியத்தலைவரினதும் தமிழ் மக்களினதும் சார்பில் வருத்தம்



தெரிவிப்பு.


*போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் திருமலையில் சந்திப்பு இடம் பெற்றது.

**02:**

* எல்லைப்படை மாவீரர் குடும்பங்களுக்கு தேசியத்தலைவர் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பு.



* இரு அமெரிக்க சனநாயகக் கட்சிப் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளைச் சந்தித்தனர். பின்னர் முல்லைத் தீவு சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.



* கிளிநொச்சியில் தமிழீழ மாவீரர் பணிமனை நடுவப்பணியகம் திறப்பு.



* யாழ்.கொக்குவில் பூநாரி மடத் தடியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் யுவதி பலி.

* சாவகச்சேரியில் சிறிலங்கா படையினரின் உந்துருளி மோதியதில் பாடசாலை மாணவி படுகாயம்.

03:

* இரத்மலானை விமானப்படைத் தளத்திற்கு சனாதிபதி சந்திரிகா விஜயம்.

* கடற்கரைச் சேனையில் திருமலை அரச அதிகாரிகளுக்கும்-புலிகளுக்குமிடையே சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது கருத்து வெளியிட்ட திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி சொர்ணம் மக் களுக்கான அபிவிருத்திப் பணிகள் முழுமனதுடன் நடைபெறவேண்டும் என்றார். □

## "நிழலகம்" முதியோர் இல்லம்
## வவுனியாவில் அமைக்கப்படும்

(வவனியா செய்தியாளர்)

வவுனியாவில் " நிழலகம் என்ற பெயரிலான முதியோர்இல்லம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இம்முதியோர் இல்லம் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் முடிவில் அமைக்கப்படவுள்ள முதியோர் இல்லத்தை நிழலகம்" என்ற பெயரில் அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. (10)

## தற்காலிக வீடுகள்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட புகையிரதவீதிக்கு அருகாமையில் வசிக்கும் ஐந்து குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஹரித்தாஸ் நிறுவனம் 45.000 ரூபா பெறுமதியில் இவ் வீடுகளை வழங்கியுள்ளது. இதேவேளை திருகோணமலை லவ்லேன் பகுதியில் 50 தற்காலிக வீடுகள் அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## அன்னை பூபதி நினைவாக வவுனியாவில் சிரமதானம்

(செட்டிகுளம்)

அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் வவுனியாவில் தற்போது உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தற்போது கிராம ரீதியாக சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் கோவில்குளம், சிதம்பரபுரம் ஆகிய பகுதிகளில் மக்களுடனான கருத்துப் பகிர்வு இடம் பெற்றுள்ளது. எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் வவுனியாவில் பிரதேசரீதியில் உண்ணாவிரதமும், சிரமதானப்பணிகளும் இடம்பெற இருக்கின்றது. எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா தாலிக்குளம் பகுதியில் இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெற இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர். (21)

# ஆழிப்பேரலையில் அழிந்த முல்லைத்தீவு;

# லண்டனில் கார்லஸ் நடத்தும் கண்காட்சி

லண்டனில் புகழ்பெற்ற போய்லெஸ் புத்தக விற்பனை நிலையத்தில் ஆழிப்பேரலையால் அழிந்த முல்லைத்தீவின் சோகப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச புகைப்படக் கலைஞர் கார்லஸ் ரேயெஸ்-மான்சோ இக்கண்காட்சியை நடத்தி வருகிறார். கடந்த இரண்டாம் திகதி இக்கண்காட்சி தொடங்கியது. சர்வதேச மன்னிப்புச்சபையின் தலைவர் கதே அலன் மற்றும் திரைப்பட நடிகை ச.்.ப்ரோன் ஆகியோர் இக்கண்காட்சியின் திறப்பு விழா நிகழ்வில் பங்கேற்றனர். ரெண்டர் சூட்ஸ் ஒவ் முல்லைத்தீவு (Tender Shoots of Mullaitivu) என்ற தலைப்பில் புகைப்படக் கலைஞர் கார்லோஸ் எழுதி வைத்துள்ள விளக்கப் பகுதியில் முல்லைத்தீவின் செந்தளிர்ச் சிறார்கள் 175 பேர் பலியான சோகத்தை துயருறும் வகையில் விவரித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் முல்லைக் கடலோரம் சந்தித்த அவலங்களை படங்களாக விவரித்துள்ள அவர், ஆழிப்பேரலையால் எதிர்கால வாழ்வைத் தொலைத்து நிற்கும் தமிழ் மக்களுக்கு சர்வதேச சமூகம் உதவ முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தவே இக்கண்காட்சியை நடத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

சிலி நாட்டைச் சேர்ந்த இப்புகைப்படக் கலைஞர் 1964 ஆம் ஆண்டு தனது புகைப்படத்துறை பயணத்தை தொடங்கினார். அந்நாட்டு சர்வாதிகாரி பினோசெட்டுக்கு எதிராகப் போராடியதால் லண்டனில் அடைக்கலம் புகுந்தார். அண்மையில் போரினால் சீரழிந்த ஈராக்கின் சிறுவர்கள் குறித்த கண்காட்சியை இவர் நடத்தினார்.

# காலநிலை ஆராய்ச்சி மைய வலைப்பின்னல் விரிவாக்கம்

(கொழும்பு)

இலங்கையின் காலநிலைஆராய்ச்சி மையம் சமிக்ஞை வலைப்பின்னலை விரிவாக்கி சுனாமி உள்ளிட்ட இயற்கை ஆபத்துக்கள் தொடர்பான முன்னறிவித்தல்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் அத்தியட்சகர் ஜி.ஏச்.பீ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துத்தெரிவித்துள்ள அவர் இலங்கைக்கான சுனாமி அனர்த்தம் தொடர்பான முன்னறிவித்தல்களைக் கொடுக்கும் தேசிய நிறுவனமாக காலநிலை ஆய்வு மையம் சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டது. அனர்த்தங்கள் தொடர்பாக மக்களுக்கு உரிய முன்னறிவித்தல்களை கொடுப்பதற்கான உத்தியோகபூர்வ பேச்சாளராக காலநிலை ஆய்வு மையத்தின் அத்தியட்சகர் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைவாக நாம் எமது தொழில்நுட்பத் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் குறிப்பிட்டார். (32)

## சீனப்பிரதமர் சிறிலங்கா விஜயம்

சீனாவின் பிரதம மந்திரி வென் ஜியாவோ ஒருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை சிறிலங்காவிற்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விஜயத்தின்போது சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா மற்றும் பிரதம மந்திரி உள்ளிட்ட முக்கியஸ்த்தர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியில் உள்ள காலங்களில் சீனாவுடன் நெருங்கிய உறவைப் பேணிவருவது குறிப்பிடத்தக்கது. (32)

# பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல தரப்புகளினதும் வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கூட்டம் நடாத்தப்படவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் தெரிவித்துள்ளன.

1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும், 94 மற்றும் இரண்டாயிரமாம் ஆண்டு சனாதிபதி தேர்தல்களிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பலகட்சிகள் இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டே வெற்றி பெற்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன்பின் பொதுஜன ஐக்கிய முன்னணி செயலிழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# மேல்கொத்மலை, நுரைச்சோலை மின்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்

## –மின்வலு எரிசக்தி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த

(கொழும்பு)

மேல்கொத்மலை, நுரைச்சோலை மின்திட்டங்கள் இரண்டையும் ஆரம்பிக்கவுள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த கூறியுள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சுசில் பிறேமஜெயந்த இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் மின்சாரசபையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அடிப்படைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் மீள் புனரமைப்பு என்பது தனியார் மயப்படுத்தலாகாது எனவும் அவர் கூறினார்.

# சனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்த ஜாதிகஹெல உறுமய முடிவு

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஜாதிகஹெல உறுமய கட்சி சார்பாகவும் வேட்பாளர் ஒருவரை நியமிக்க கட்சி எண்ணியிருப்பதாக கட்சியின் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதித் தேர்தலில் போட்டியிட எண்ணிய போதும் இதுவரை வேட்பாளர் ஒருவரை நியமிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 2 ஆம் திகதி ஹோமகமவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது, சனாதிபதித் தேர்தலுக்குப் பின் நடைபெறும் மாகாணசபைத் தேர்தல், மாநகர,நகரசபைத் தேர்தல் என்பவற்றுக்கும் வேட்பாளர்களை நியமிக்க கட்சி திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# அரச துறைகளை மறுசீரமைப்பது அத்தியாவசியமானது – சரத் அமுனுகம

(கொழும்பு)

எத்தகைய எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள்,சபைகள், கல்விச் சேவை போன்ற சேவைகளையும் அனைத்து துறைகளையும் மறுசீரமைப்பது மிகவும் அத்தியாவசியமானது என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். அரச இயந்திரத்தினை நவீனமயப்படுத்தாது விட்டால் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மக்கள் எம்மை வேடர்களாகக் கணிப்பார்கள் எனத் தெரிவித்துள்ள அவர் சிலரது எதிர்ப்புகளின் காரணமாக இரண்டு கோடி மக்களின் எதிர்காலத்தை வீணடிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# 102 ஆம் நாள் நினைவலைகள்

## இறப்பு – 26.12.2004



பாலசுப்பிரமணியம்
**சுஜிதா**
பிறப்பு 15 - 08 - 1988



பாலசுப்பிரமணியம்
**புவிதா**
பிறப்பு 25 - 02 - 1995



கிறிஸ்ரி பெனாண்டோ
**ஜதுர்சாந்**
பிறப்பு 04 - 11 - 1997



கிறிஸ்ரி பெனாண்டோ
**மேரி அஞ்சலீனா**
பிறப்பு 06 - 04 - 1970



பாலசுப்பிரமணியம்
**மேரி எலன் சீற்றா**
பிறப்பு 23 - 10 - 1963



கிறிஸ்ரி பெனாண்டோ
**ஷண்பகா**
பிறப்பு 24 - 06 - 1996

அன்பின் திருவுருவமாய் பண்பின் மறுவுருவமாய்
பாசத்தின் இருப்பிடமாய் நேசத்தின் தரிப்பிடமாய்
பார்போற்றும் நல்வாழ்வைப் பாதியில் இடைநிறுத்தி
ஆழ்கடலின் அலைகளுக்கு ஆருயிரை அர்ப்பணித்தீர்.
மாறாது எம் துயரம் மறையாது உமதுருவம்
மண்மீது இனி நீங்கள் மலரும் நாள் எப்போது.

*இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக புதன்கிழமை (06.04.2005) இன்று காலை 6.30 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்திலும் மாலை 05 மணிக்கு சிலாவத்தை புனித அன்னம்மாள் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.*

(5818)

# ஸ்ரீநகர்-முசபராபாத் பேருந்து மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்; தடுக்க இராணுவம் தயார்!

(ஸ்ரீநகர்)

ஸ்ரீநகரில் இருந்து பாகிஸ்தானுக்குப் பிரதமர் மன்மோகன்சிங்நாளை தொடங்கிவைக்கவிருக்கும்பேருந்தை தகர்க்கத்தீவிரவாதிகளுக்கு அவர்களது தலைமை உத்தர விட்டுள்ளது. அதைத்தொடர்ந்து பேருந்து செல்லும் பாதை அருகே தீவிரவாதிகள் குவிகிறார்கள். தீவிரவாதிகளுக்குப் போடப்பட்ட உத்தரவை இரகசியமாகக் கேட்ட இராணு வத்தினர் பதில்தாக்குதலுக்குத் தயாராகிறார்கள் என இந்தியப்படைத் தரப்புகூறுகிறது. இந்தியா-பாகிஸ்தான் நாடுகள்இடையே பேருந்துப் போக்குவரத்து நடத்த இரு நாடுகளும் ஒப்புக் கொண்டிருந்தன. அதன்படி காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானில் உள்ள முசபராபாத்துக்கு நாளை முதல் பேருந்துப் போக்கு வரத்து நடத்தப்படுகிறது. இந்தப் பேருந்து போக்குவரத்துத் தொடக்கவிழா ஸ்ரீநகரில் உள்ள கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் நடக்க இருக்கிறது. பிரதமர் மன்மோகன்சிங் கலந்துகொண்டு பேருந்து போக்குவரத்தைத் தொடங்கிவைக்கவுள்ளார். விழாவில் காங்கிரஷ் தலைவி சோனியாகாந்தி, காஷ்மீர முதல்வர் முப்தி முகமது சையது ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

1947 இற்குப்பின்னர் 58 ஆண்டுகள் கழித்து ஸ்ரீநகர்-முசபராபாத் இடையே மீண்டும் போக்குவரத்து நடக்கிறது.

காஷ்மீரிலிருந்து 19 இருக்கைகள் கொண்ட 2 பேருந்துகளில் இருபத்தொன்பது பயணிகள் முதல் பயணமாக முசபராபாத் புறப்பட்டுச் செல்வார்கள்.

அதேபோல் முசபராபாத்தில் இருந்து முப்பது பயணிகள் ஒரு பேருந்தில் முதல் பயணமாக காஷ்மீர் புறப்பட்டு வருவார்கள்.

காஷ்மீரிலிருந்து புறப்படும் இரண்டு பேருந்துகளும் கட்டுப்பாட்டுக் கோட்டில் உள்ள பாலத்தை அடைந்ததும் அவற்றிலுள்ள பயணிகள் இறங்கி எல்லைக் கோட்டை நடந்து கடந்து சென்று அடுத்த பக்கம் தயாராக நிற்கும் பாகிஸ்தான் பேருந்தில் ஏறிக்கொள்வார்கள்.


அதேபோல் பாகிஸ்தான் பேருந்தில் வந்தவர்கள் எல்லைக் கோட்டைக் கடந்து இந்தியப் பேருந்துகளில் ஏறிக்கொள்வார்கள்.

இந்தப் பேருந்துப்போக்குவரத்துக்குத் தீவிரவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள். இந்த பேருந்துகளில் ஏறுவோர் தாக்கப்படுவார்கள். பயணத்தை ரத்துச்செய்ய வேண்டும். அந்த பேருந்துகளை சவப்பெட்டியாக மாற்றுவோம் என்று காஷ்மீர் மீட்பு இயக்கம் உட்பட நான்கு தீவிரவாத அமைப்புகள் எச்சரித்துள்ளனர்.

இந்த நிலையில் தீவிரவாதிகளுக்குத் தொலைக்கருவி மூலம் அவர்களது தலைமை அனுப்பிய செய்தியை இந்திய இராணுவம் ஒட்டுக்கேட்டுள்ளதாகவும் அதில் காஷ்மீரின் வடக்குப் பகுதி செல்லுங்கள். அங்கு ஏழாம் திகதிவரை கடுமையான தாக்குதல் நடத்துங்கள் என்று உத்தரவிடப் பட்டுள்ளதாகவும்இதனையடுத்து அந்தப் பகுதியில் தீவிரவாதிகள் குவிந்த வண்ணமுள்ளனர். எனவும் பிரதமர் மன்மோகன்சிங் தொடங்கி வைக்கும் பேருந்துகளை ஏவுகணை வீசியோ அல்லது வேறுவிதமான தாக்குதல் நடத்தியோ அவர்கள் தகர்க்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அந்தப் பாதை எங்கும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பதிலடிக்குத் தயாராகி வருகின்றார்கள். காஷ்மீரில் இருந்து செல்லும் பேருந்துகளுக்குத் துணையாக ராணுவ வாகனங்களும் இரண்டு மீட்பு வாகனங்களும், ஒரு அம்புலன்சும் செல்லும். இதற்கிடையில் பேருந்துப் போக்குவரத்துத் தொடக்கவிழா நடக்கும் ஸ்ரீநகர் கிரிக்கெட் மைதானத்திலும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. அந்த மைதானத்துக்கு வரும் அனைத்துவழிகளும் போக்குவரத்தை நிறுத்தியுள்ளனர்.

ஸ்ரீநகர் முழுவதும் வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன. வீடு வீடாகவும் பாதுகாப்புப்படையினர் சோதனை நடத்தி சந்தேகப்படும்படி காணப்பட்ட முப்பது பேரைக் கைது செய்தனர்.



ஸ்ரீநகரில் இருந்து பாகிஸ்தானின் முசபராபாத்துக்கு பேருந்துப் பயணத்தைத் தொடங்கி வைக்கவிருக்கும் மைதானத்தில் இராணுவத்தினர் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள்.

# ஆந்திராவில் நக்சலைட் தாக்குதலில் காங்கிரஸ் முக்கியஸ்தர் பலி!

(ஐதராபாத்)

ஆந்திராவில் வெவ்வேறு இடங்களில் நக்சலைட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் காங்கிரஸ் தலைவர் ஒருவர் பலியானார். ஏழு அரச பேருந்துகள் தீவைத்து எரிக்கப்பட்டன. பொலிசாருக்கும், நக்சலைட்டுகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் நக்சலைட்டுகள் இருவர் பலியாகினர்.

ஆந்திராப்பொலிசார் நேற்று முன்தினம் இரண்டு நக்சலைட் தீவிரவாதிகளைச் சுட்டுக்கொன்றனர்.இதனையடுத்துநக்சலைட்டுக்கள் நேற்று மெகபூப்நகர் மாவட்டம் அச்சம் பேட்டை மண்டல காங்கிரஸ் தலைவரான மதுசூதன ரெட்டியை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். ஆறு அரச பேருந்துகளையும் தீவைத் துக் கொளுத்தினர். இதனையடுத்து நக்சலைட்டுகள் குண்டூர் மாவட்டத் தில் மேலும் ஒரு அரச பேருந்துக்கு தீவைத்தனர். பாவபுரம் -லிங்கபுரம் தேசிய நெடுஞ்சாலையில் வாகனச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிசார் மீது வாகனத்தில் சென்ற நக்சலைட் தீவிரவாதிகள் கைக் குண்டை வீசினர். குண்டு வெடிக்காததால் உடனே பொலிசாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பொலிசாரும் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் நக்சலைட தீவிரவாதி ஒருவர் உயிரிழந்தார்.

இதேபோல், கர்னூல் மாவட்டம் பாவபுரம் கிராமத்தில் நக்சலைட்டுகளுக்கும், பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் நக்சலைட் தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# பீகாரில் சனாதிபதி ஆட்சி தொடர பஸ்வானின் லோக்ஜனசக்திக்கு விருப்பம்

(பாட்னா)

சனாதிபதி ஆட்சி அமுலில் இருந்து வரும் பீகார் மாநிலத்தில் மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வானின் லோக்ஜனசக்தி உட்பட சில கட்சிகள் மற்றும் 17 சுயேச்சைகளின் ஆரவுடன் புதிய அரசு அமைக்க ஐக்கிய ஜனதாதள தலைவர் நிதிஷ்குமார் முயற்சி செய்து வருகிறார்.

இது தொடர்பாக அவர் பஸ்வானை சந்தித்து பேசினார். ஆனால் பாரதீய ஜனதாவுடனான உறவை ஐக்கிய ஜனதாளம் துண்டித்தால் தான அந்த கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு கொடுக்க முடியும் என்று பஸ்வான் கூறிவிட்டார். இதனால் நிதிஷ்குமாரின் முயற்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பீகாரில் சனாதிபதி ஆட்சி நீடிக்க பஸ்வான் விருப்பம் தெரிவித்துள்ளார். பஸ்வான் நேற்று பாட்னாவில் நிருபர்களிடம் கூறும்போது. சனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டதில் இருந்து பீகார் மாநிலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் அபிவிருத்திக்கும் மக்களின் பாதுகாப்பிற்கும் லோக் ஜனசக்தி முன்னுரிமை அளிக்கிறது. எனவே பீகாரில புதிய அரசு அமைக்கும் பிரச்சினையில் லோக்ஜனசக்தி அவசரப்படாது. ராஷ்டிரீய ஜனதா தளத்தையும் பாரதீய ஜனதாவையும் எங்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் வெளியே வந்தால் தான் அந்தக் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு கொடுக்க முடியும் என்ற எங்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 2009 ஆம்ஆண்டிற்குள் 74 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் பிரதமரால் ஆரம்பம்!

(புதுடில்லி)

இந்தியாவில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரவசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் "ராஜீவ் காந்தி மின்சாரத்திட்டம்" தொடங்கப்பட்டது. இந்தத்திட்டத்தின்படி இன்னும் மின்சாரத்தையே காணாத 74 ஆயிரம் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக மத்திய அரசு ஐயாயிரம் கோடிரூபா ஒதுக்கி இருக்கிறது. இந்தத்திட்டத்தின் தொடக்க விழா நேற்று டில்லியில் நடந்தது. இணையமூடான தொடர்பு. முறையில் இந்தத் திட்டம் பன்னிரண்டு மாநிலங்களிலும் தொடக்கி வைக்கப்பட் டது.

புதியதிட்டத்தைப் பிரதமர் மன்மோகன்சிங் தொடக்கி வைத்துப் பேசும்போது நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கு அரசியல் வேறுபாடு இல்லாமல் அனைத்து மாநிலங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். சீரான மின்விநியோகம் அனைத்து மாநிலங்களிலும் ஒரே மின்சாரக் கட்டணம் போன்றவற்றைப்பற்றி ஆய்வு நடத்தவேண்டும். தேசத்தின் நலனையே கருத்தில் கொள்ள வேண்டும். அரசியல் ரீதியாக இதைப பார்க்கக் கூடாது.

ஏழை மக்கள் மற்றும் விவசாயிகளுக்குச் சலுகைக்கட்டணம் மற்றும் இலவசமாகவும் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதைபயன் பெறும் மக்கள் உணரவேண்டும். மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

நூறு கோடி மக்கள் தொகைக்கு மேல் உள்ள இந்தியாவில், நாளுக்கு நாள் மின்சாரத்தின் தேவை அதிகரிக்கிறது. எனவே மின் உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டங்கள் தேவை. புதியதிட்டங்களை நிறைவேற்ற தீவிரநடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு பிரதமர் மன்மோகன்சிங்தெரிவித்தார்.

விழாவில் தேசிய ஆலோசனைக் குழுத்தலைவர் சோனியாகாந்தி கலந்து கொண்டார். விழாவில் அவர் பேசும் போது;

குறைந்தபட்ச செயல்திட்டத்தில் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் பணிக்கு முன்னுரிமை அளிக கப்பட்டுள்ளது. குறைந்த பட்சதிட்டத்தை முழுமையாக செயற்படுத்துவோம். விவசாயம், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதாரம், மின்விநியோகம் போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 2009ஆம் ஆண்டுடிற்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வசதி ஏற்படுத்துவோம் என்றும் சோனியா தெரிவித்தார்.

# மகாத்மா காந்தியின் யாத்திரையை நினைவு கூரும் முத்திரை வெளியீடு

மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையை நினைவு கூரும் வகையில், சிறப்பு தபால் தலை பொறிக்கப்பட்ட முத்திரைகளை பிரதமர் மன்மோகன்சிங் வெளியிட்டு வைக்கவுள்ளார். இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் மிக முக்கிய இடம பெறுவது தண்டியாத்திரை. பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இந்தியா இருந்த போது உப்புக்கு வரிவிதிக்கப்பட்டது. அதை எதிர்த்து மகாத்மாகாந்தி தண்டியாத்திரை மேற்கொண்டார் . கடந்த 1930 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி தண்டியாத்திரையை காந்தி நடத்தினார். சபர்மதி ஆச்சிரமத்தில் இருந்து புறப்பட்டு 25 நாட்கள் நடைப் பயணம் மேற்கொண்ட மகாத்மா காந்தி ஏப்ரல் ஆறாம்திகதி தண்டி யாத்திரையை நிறைவு செய்தார் அப்போது, ஆயிரக்கணக்கானோர் அடித்து வதைக்கப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர் அந்தச் சம்பவத்தை நினைவுகூரும் வகையில் சிறப்பு தபால் தலைகள் பொறிக்கப்பட்ட முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. தண்டியாத்திரை போராட்டம் நடந்து 75 ஆண்டுகள் முடிந்ததை முன்னிட்டு காங்கிரஸ் தலைவர் சோனியா மார்ச் 12ஆம் திகதி யாத்திரையைத் தொடங்கி வைத்தார். அந்த யாத்திரை இன்று முடிவடைகிறது.

ஆந்திரா மாநிலம் ஹைதராபாத்தில் உள்ள நிலோபார் மருத்துவமனையில் சீமாபேகம் (24) என்ற பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள் ளன. இரண்டு ஆண் குழந்தைகளையும், இரண்டு பெண் குழந்தைகளையும், தாயையும் படத்தில் காணலாம்.




பருத்தித்துறையில் J.R.M.TEX

வாங்க....... வாங்க........

ஜே.ஆர்.எம் புடைவைக்கடை

பண்டிகைக்கால மலிவு விற்பனை!

நம்பமுடியாத மாபெரும் மலிவு விலைகளில் சாறி, ஸ்கேட்டன் பிளவுஸ், பஞ்சாபி, இன்னும் ஏராளம். நவீன நாகரிக உடைகள். எடுக்கும் தொகையில் இருந்து மூன்றில் ஒன்று பணம் தள்ளுபடி. இந்தியா உட்பட வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டுப் புடவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு
6 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை

J.R.M.TEX
ஜே. ஆர். எம் புடைவை அகம்
பிரதான வீதி–பருத்தித்துறை.

(சி11624)



# டோனி, சேவாக் அனல்பறக்கும் ஆட்டம்
# போராடித் தோற்றது பாகிஸ்தான் அணி

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 58 ஓட்டங்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி சேவாக், டோனி ஆகியோரின் அனல் பறக்கும் துடுப்பாட்ட உதவியுடன் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 356 ஓட்டங்களைப் பெற்றது.


துடுப்பாட்டத்தில் டோனி 148 ஓட்டங்களையும், சேவாக் 74ஓட்டங்களையும் ராவிட் 52 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கசன் மூன்று விக்கெட்டுக்களையும், அர்சத்கான், கபீஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், சமி ஒரு விக்கெட்டையும், கைப்பற்றினர்.

பதிலுக்கு இமாலய வெற்றி இலக்கு நோக்கி ஆடிய பாகிஸ்தான் 44.1 ஓவர் நிறைவில் 298 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ரசாக் 88ஓட்டங்களையும் யுஹானா 71 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் நெஹ்ரா நான்கு விக்கெட்டுக்களையும், யுவராஜ்சிங் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


போட்டியின் சிறப்பாட்டக்காரராக



128 பந்துகளில் 148 ஓட்டங்களைக் குவித்த டோனி தெரிவானார்.

ஆறு போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் இந்தியா 2-0 என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது.

# நேப்பியர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
# நியூசிலாந்து 561 ஓட்டங்கள் குவிப்பு



நியூசிலாந்து - சிறிலங்கா அணிகளுக்கிடையில் நேப்பியரில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி தனது முதல் இனிங்சிற்காக 561 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்று 12 ஓவர்கள் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா தனது முதல் இனிங்சில் விக்கெட் இழப்பின்றி 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அத்தப்பத்து 14 ஓட்டங்களையும், ஜெயசூரியா 31 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

நியூலாந்து துடுப்பாட்டத்தில் ஜெப் மார்சல் 160,அஸ்ரல் 114,மக்குலம் 99,பிறங்லின் 55,மார்சல் 52 ஓட்டங்களை முறையே அதிக பட்சமாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் மாலிங்க நான்கு விக்கெட்டுக்களையும்,வாஸ்,கேரத் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், சந்தன, குலசேகர தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



ஆர்ஜென்டினாவில் போக்கா ஜுனியர்ஸ் கால்பந்துக் கழக அணி மிகவும் புகழ்பெற்றது. இதன் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் நேற்று முன்தினம பியூனஸ் ஏர்சில் நடந்தது. இதில் ஆர் ஜென்டினா அணியின் முன்னாள் கால்பந்து ஜாம்பவானான மரடோனா தீபத்தை ஏந்திச் சென்றார்.

# கலிஸ், கிப்ஸ் பொறுப்பான ஆட்டம்
# மே.தீவின் வெற்றிவாய்ப்புத் தகர்ந்தது



தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையில் கயானாவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

பாலோ-ஓன் நிலையில் தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆடிய தென்னாபிரிக்கா கலிஸ், கிப்ஸ் பொறுப்புடன் ஆடி அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்றினர்.

மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்சில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 543 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

தென்னாபிரிக்கா முதல் இனிங்சில் 188 ஓட்டங்களுடன் சுருண்டு பாலோ-ஓன் ஆனது. தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆடிய தென்னாபிரிக்க நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 85 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இறுதி நாளான நேற்று முன்தினம் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 279 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் துடுப்பாடிய தென்னாபிரிக்கா ஆட்ட நேர முடிவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கலிஸ் ஆட்டமிழக்காது 109 ஓட்டங்களையும், கிப்ஸ் 49 ஓட்டங்களையும் பெற்றனர். கடைசி நாள் ஆட்டமும் மழை யால் பாதிக்கப்பட்டது. கலிஸ் சதம் மற்றும் மழையால் தென்னாபிரிக்கா தோல்வியில் இருந்து தப்பியது.

# முன்னணி வீரர்கள் இணைப்பு



விளம்பரப் பிரச்சினை காரணமாக லாரா உட்பட ஏழு வீரர்கள் முதல் டெஸ்டில் சேர்க்கப்படவில்லை. தற்போது இந்தப் பிரச்சினை சுமுகமாக முடிந்துவிட்டது. இதனால் இரண்டாவது டெஸ்டில் லாரா, சர்வான் உட்பட ஏழு வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் சந்திரபோல்தான் தலைவராக இருப்பார். இரண்டாவது டெஸ்ட் வரும் எட்டாம் திகதி டிரினிடட்டில் தொடங்குகிறது. இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்திய தீவு அணி வருமாறு.

சந்திரபோல் (தலைவர்), பிரவுணி, கிறிஸ் கெய்ல்,வாவல் ஹிண்ட்ஸ், சர்வான்,லாரா,ரெயான் ஹிண்ட்ஸ், பிரேவோ,போவெல்,பெட்ரோ கோலின்ஸ் ரேயான் கிங் டிவைட் வாஷிங்டன்.

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்
# வலைப்பந்து, மென்பந்துப் போட்டிகள்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட், வலைப்பந்துப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. போட்டிகளை பிரதேச செயலர் சிவசிறி ஆரம்பித்து வைத்தார்.

கிரிக்கெட் போட்டியில் முதலிடத்தை சோலை வி.கழகமும், இரண்டாம் இடத்தை குணா வி.கழகமும் பெற்றன.

வலைப்பந்துப் போட்டியில் சென்பீற்றர்ஸ் வி.கழகம் முதலாமிடத்தையும், சென்மேரிஸ் வி.கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன. மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக சுபானந்த், சிவநேசன், மனோன்மணி, சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

# மெய்வன்மைப் போட்டி இன்று


பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளதால் கலந்து கொள்ளும் கழகங்கள் தமது விண்ணப்பங்களை இன்று செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச பதில் விளையாட்டு உத்தியோகஸ்தர் க. புவனேந்திரராஜா கேட்டுள்ளார்.

# கால் பந்துப் போட்டியில் இன்று

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட ...ளின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் ...மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ...வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் ...மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ...னத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள ...களின் விபரங்கள் வருமாறு,

யாழ். லீக்கைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். லீக்கைச் சேர்ந்த பாடும் மீன் விளையாட்டுக்கழகம்.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த யங்கென்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முல்லை விளையாட்டுக் கழகம். (41)



கிளி. சிவநகர் அ.த.க பாடசாலை மாணவன் நடராசா றஜீவன் கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவில் (உயரம்பாய்தல், நீளம் பாய்தல், (முப்பாய்ச்சல் ஆகிய நிகழ்வில் (முதலிடம் பெற்று) சிறந்த விளையாட்டு வீரனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# கால்பந்து காலிறுதி ஆட்டங்களில்
# லக்கிஸ்டார், கரணவாய்மத்தி அணிகள் வெற்றி




கிளி. ஸ்கந்தா வி.கழகமும், யாழ். ஸ்கந்தா ஸ்ரார் வி.கழகமும் மோதும் காட்சி.

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டங்களில் வட்டக்கச்சி லக்கிஸ்டார் விளை.கழகமும், பருத்தித்துறை லீக்கைச்சேர்ந்த கரணவாய் மத்தி விளை. கழகமும் வெற்றிவெற்றுள்ளன.

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளை. கழகத்திற்கும், கிளிநொச்சி வட்டக்கச்சி லக்கிஸ்டார் விளை.கழகத்திற்குமிடையே இடம்பெற்ற போட்டியில் 7-6 என்ற கோல் கணக்கில் வட்டக்கச்சி லக்கிஸ்டார் விளை. கழகம் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த கரணவாய் மத்தி விளை. கழகமும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விநாயகர் விளை. கழகமும் மோதிக் கொண்டதில் 5-4 என்ற கோல் கணக்கில் கரணவாய் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. இரு ஆட்டங்களும் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (41)

# விளையாட்டு



அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் நாஸ்டாக்-100 ஓபன் டென்னிஸ் போட்டி நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து), இளம்வீரர் ரபெல் நாடெலை (ஸ்பெயின்) எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரோஜர் பெடரர் 2-6, 6-7,7-6,6-3, 6-1 என்ற செட் கணக்கில் போராடி வென்று சம்பியன் பட்டம் வென்றார். இது இந்தப் பருவகாலத்தில் அவர் வென்ற ஐந்தாவது பட்டமும் தொடர்ந்து பெற்ற 22ஆவது போட்டி வெற்றியுமாகும்

## சிந்தனைக்கு



தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான - தனித்துவமான - ஆளுமையைப் பெறுகின்றது

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மங்களவிற்கு மங்களம்?

ஊடகத்துறை அமைச்சர் மங்களசமரவீரவின் பொறுப்புக்களைப் படிப்படியாகப் பறித்தெடுக்கும் நடவடிக்கைகளில் சனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுள்ளாரா? என்ற கேள்வியை அண்மைய நிகழ்வுகள் சில தோற்றிவிப்பனவாகவுள்ளன. இதில் இறுதியாக "லேக்ஹவுஸ்" பத்திரிகை நிறுவன புதிய நிர்வாகியாக நிதிஅமைச்சர் சரத்அமுனுகமவை சனாதிபதி சந்திரிகா நியமிக்கத் தீர்மானித்துள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாடு சென்றிருந்த சமயம் அவரின் பொறுப்பிலிருந்த ரூபவாஹினித் தொலைக்கட்சி நிறுவனத்தினை நிர்வகிப்பதற்கெனச் சிறப்புக்குழு ஒன்றை நியமித்திருந்தார்.இச்சிறப்புக்குழுவில் பிரதிஅமைச்சர்கள் சிலரும் இடம்பெற்றிருந்தனர்.

ரூபவாஹினித் தொலைக்கட்சி இயக்குநர்களுக்கும், அமைச்சருக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாகக் கூறியே இப்பறிப்பு/மாற்றம் ஏற்பட்டதாகத் சனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அப்பொழுது வெளியாகிய தகவல்களின்படி ஜே.வி.பி தொடர்பான தகவல்களுக்கு ரூபவாஹினி முதன்மை அளித்து வந்தமை காரணமாகவே இப்பறிப்பு இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இது ஊகத்தின் அடிப்படையிலான காரணம் எனவும் தட்டிக் கழித்துவிட்டமுடியது ஏனெனில் இதற்கு முன்னதாக ஜே.வி.பியின் பிரச்சாரங்களை ரூபவாஹினி தொலைக்காட்சி ஒலிபரப்ப சனாதிபதி சந்திரிகா தடை விதித்திருந்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஆனால் காரணம் எதுவாகிலும் அமைச்சர் மங்கள சமரவீரவின் அமைச்சின் கீலிருந்த ஒரு பகுதி அதிகாரம் அவரிடம் இருந்து பறிக்கப்பட்டது என்பது நிதர்சனமானதாகும். இந்நிலையில் மீண்டும் சில பகுதிகளைப் பறிக்க முற்படுவது சனாதிபதி சந்திரிகா–அமைச்சர் மங்கள சமரவீர உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதா? அதாவது சனாதிபதி சந்திரிகா அமைச்சர் மங்களசமரவீரவிற்கு மங்களம் பாடத் தலைப்பட்டு விட்டாரா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

தற்போது வெளியாகும் தகவலின்படி ''லேக்ஹவுஸ'' நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பும், வாரந்த ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தும் பொறுப்பும் நிதி அமைச்சர் சரத்அமுனுகமவிடம் வந்துள்ளது, இதனை அமைச்சர் சரத் அமுனுகமவே ஊர்ஜிதம் செய்திருந்தார். கடந்த சனிக்கிழமை கண்டியில் ஊடகவியலாளரிடம் பேசிய அவர் "லேக்ஹவுஸ" நிர்வாகப் பொறுப்பு எதிர்வரும் வியாழக்கிழமை தன்னிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் இது குறித்துச் சிறப்பாணையை சனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அத்தோடு இனி வாராந்தப் பத்திரிகையாளர் மாநாடுகளை நடாத்தும் பொறுப் பும் தன்னிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். அதாவது அமைச்சர் மங்கள சமரவீரவிடம் அமைச்சுப் பொறுப்பு இருக்கையிலேயே படிப்படியாகப் பொறுப்புக்களைப் பிடுங்கி எடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

அமைச்சர் மங்கள சமரவீர சனாதிபதி சந்திரிகாவிற்கு மிக வேண்டியவராக இருந்தார். ஒருவகையில் சனாதிபதி சந்திரிகாவின் அரசியற்செயற்பாடுகளைத் தீர்மானிப்பவராகவும் வழி நடத்துபவராகவும் இருந்தவர் எனின் மிகையாகாது.

இந்த வகையில் கடந்த பொதுத் தேர்தல் முன்பான ஜே.வி.பி.யின் கூட்டு, தேர்தலின் பின்னரான ஜே.வி.பி–சனாதிபதிக்கிடையிலான முரண்பாடுகளுக்கு முடிவுகாணுதல், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் இணைவதற்கான நடவடிக்கைகள், முஸ்லிம் காங்கிரஸிற்குள் பிளவு உண்டாக்கியமை போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் மங்கள சமரவீரவின் பங்கு காத்திரமானது.

இந்தவகையில் சனாதிபதி சந்திரிகா ஆட்சியைக் கைப்பற்றுவதற்குச் சூத்திரதாரி போன்று செயற்பட்ட மங்கள சமரவீரவைக் கழற்றிவிட சனாதிபதி சந்திரிகா முற்பட்டு நிற்பதாகவே தற் போதைய அவரது நடவடிக்கைகள் மூலம் ஊகிக்ககூடியதாக உள்ளது.

இவ்வாறானதொரு தீர்மானத்தின் அடிப்படையில் சனாதிபதி சந்திரிகா செய்றபடுவாரேயானால் இதற்குக் காரணம் மங்கள சமரவீர ஜே.வி.பியினருடன் கொண்டுள்ள நெருக்கமே காரணமாக இருக்க முடியும் ஏனெனில் ஜே.வி.பியுடனான உறவு தொடர்பாகச் சனாதிபதி சந்திரிகா பெரிதும் சலிப்புற்றுப்போயுள்ளார். இம்மதிப்பீடு சரியானால் வேறு சில அமைச்சர்களுக்கும் ஆபத்து உருவாக வாய்ப்புண்டு. ஆனால் இவையாவற்றையும் பொய்யாக்கும் வகையில் சனாதிபதி சந்திரிகா மங்களவை இதை விட உயரத்தில் தூக்கி வைத்தாலும் ஆச்சரியப்படமுடியாது.

-ஆழிப்பேரலை அனர்த்தத்திலிருந்து பாதுகாக்க-

# கடற்கரையில் தூரத்தை அடிப்படையாகக்கொண்டு கட்டடங்கள் அமைப்பதைத் தவிர்க்க வேண்டுகை

(கொழும்பு)

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளை நிலத்திருந்து உயரமாக அமைக்குமாறு நில அளவையாளர்கள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

கரையோரப்பாதுகாப்பு வலயமானது கடற்கரையிலிருந்தான தூரத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படக்கூடாதெனவும், நிலத்திலிருந்து கட்டடங்கள் கட்டப்படுகின்ற உயரத்தைக் கொண்டே கணிப்பட வேண்டுமெனவும்நிலஅளவையாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட நில அளவையாளர் சுனில் சோமசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம்திகதி கடற்கோள் அனர்த்தம் ஏற்பட்டபோது சில பிரதேசங்களில் கடல் அலை இரண்டுகிலோமீற்றர் தூரத்திற்கு உள்ளே வந்ததாகக் குறிப்பிட்டுள்ள அவர், தூரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டடங்கள்அமைக்கப்படுவது பொருத்தமற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக வீடுகளை உயரத்தில் அமைப்பதே பொருத்தமானது என்றும் அவர் கூறிகிறார்.

கடல்கோளின் உயரமானது கடல் மட்டத்திலிருந்து அளவிடப்படுவதாகத் தெரிவித்துள்ள சிரேஷ்ட நில அளவையாளர் சுனில் சோமசிறி ஒவ்வொரு இடங்களிலும் கடல் நீர்மேலெழுந்த உயரங்கள்வேறுபட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

எனவே கடல்கோளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்படும் வீடுகள் கடற்கரையிலிருந்தான தூரத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படாமல், உயரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# 350 ரூபாவிற்கு உரம் தருவதாகக் கூறிய ஐ.ம.சு.முன்னணி இப்போது செய்வதென்ன?

–சாடுகிறார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு புகையிரத நிலையத்திற்கு அருகில் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தின் போது 350 ரூபா உரம் தருவதாகவும், நெல்லை 17 ரூபா ஐம்பது சதத்திற்குக் கொள்வனவு செய்வதாகவும் கூறி, இளநீர் கொடுத்து அதனை முடிவிற்குக் கொண்டுவந்த ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி அரசாங்கத் தலைவர்களின் ஒருவருட ஆட்சிக் காலம் முடிவடைந்துள்ளது. இப்போது விவசாயிகள் நெருப்புத் தண்ணீரைக் குடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், விவசாயிகள் நெருப்புத் தண்ணீரைக் குடிக்கும் அதேவேளை கூட் டமைப்பு அரசாங்கத்துடன் தொடர்பு பட்ட அரிசி ஆலை முதலாளிமார் விஸ்கி,பிரண்டி குடிக்கிறார்கள். இத னைத்தான் இன்று மக்கள் விடுதலை முன்னணியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் உருவாக்கியுள்ளன. நரிகளுக்குக் கோழிகொடுக்கும் வேலை யையே இன்றைய அரசாங்கம் செய் கிறது என ரணில் மேலும் கூறினார்.

-மின்சாரசபை பெற்றோலிய கூட்டுத்தாபன விவகாரம்-

# மின்சக்தி அமைச்சர் - ஜே.வி.பி யினர் சந்தித்து விரிவாக ஆராய்வு

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் தனியார்மயப் படுத்தப்பட மாட்டாது என்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வாக்குறுதிக்கு உட்பட்டவகையில் சிறிலங்கா மின்சார சபையை மறுசீரமைக்க தாங்கள் எதிர்ப்பார்ப்பதாக சிறிலங்காவில் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் பற்றி மக்கள் விடுதலை முன்னணியுடன் விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். சிறிலங்கா மின்சார சபையை மறுசீரமைத்தல் மற்றும் திறைசேரி வசம் இருக்கும் சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்கில் மூன்றில் ஒன்றை மூன்றாம் தரப்பிற்கு வழங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக சிறிலங்கா மின்சக்தி அமைச்சருக்கும், மக்கள் விடுதலை முன்னணிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடந்தது. அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும்போது அவற்றை தனியார் மயமாகாத வகையில் மறுசீரமைக்கப் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என அமைச்சர் கூறியுள்ளார். சிறிலங்கா மின்சார சபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை மூன்றாம் தரப்பிற்கு வழங்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக அரசு முன்வைத்திருக்கும் யோசனைகளுக்கு தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு இச்சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாரத்தில் தொழிற்சங்கங்களுடனான சந்திப்பை நடத்தி இன்னும் இருவார காலத்தினுள் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்குத்தான் எதிர்பார்ப்பதாகவும் மின்சக்தி அமைச்சர் கூறியுள்ளார். இச் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அமைச்சர்கள் அனுரகுமார திசாநாயக்க, லால்காந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மேஜர்ஜெனரல் வஜிர குணவர்த்தனவின் இடமாற்றத்திற்கு விசேட காரணமில்லை

-இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

வெலிக்கந்த் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன இடம்மாற்றப்பட்டமைக்கு எந்தவிதமான விசேட காரணமும் இல்லையென சிறிலங்காப் படைத்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். வெலிகந்த. 23ஆம் படையணியின் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் வஜிரகுணவர்த்தன இராணுவத் தலைமையகத்திற்கு இடம்மாற்றப்பட்டமையானது வழமையான நிர்வாக நடைமுறையெனவும், இந்த இடமாற்றத்திற்கு எந்தவிதமான விசேட காரணங்களும் இல்லையெனவும் சிறிலங்காப் படைத்துறைப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க கூறியுள்ளார்.

வெலிகந்த இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன மீது தாக்குதல் நடாத்துவதற்கு திட்டமிடப்படுவதாக இராணுவப் புலனாய்வாளர்கள் அறிக்கை சமர்ப்பித்திருந்ததாகவும், இதனையடுத்தே அவர் இடம் மாற்றப்பட்டதாகவும் அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆயினும் இந்தச் செய்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லையென சிறிலங்காப் படைத்துறைப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க மேலும் தெரிவித்துள்ளார். வெலிகந்த 23 ஆம் படையணியின் புதியகட்டளைத் தளபதியாக பிரிகேடியர் திஸ்ஸஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

# அவுஸ்திரேலியா மானிய விலையில் கோதுமை மா வழங்கத் தீர்மானம்

– தட்டுப்பாடு நீங்குமென சிறிலங்கா அரசு நம்பிக்கை

(கொழும்பு)

அவுஸ்திரேலியா அரசு சிறிலங்கா அரசுக்கு ஒரு தொகுதி கோதுமை மாவை மானிய விலையில் வழங்க முன்வந்துள்ளது.

25 ஆயிரம் மெற்றிக்தொன் மாவை வழங்கவுள்ளதாக அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. இதற்கான ஒப்பந்தமொன்றில் சிறிலங்காவின் வணிகத்துறை அமைச்சர் விரைவில் கையெழுத்திடவுள்ளார்.

மேலும் துருக்கி மற்றும் ஆர்ஜென்டீனா நாடுகளும் மானியவிலையில் கோதுமை மாவை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள அதேவே[illegible] மாவின் விலையும் அதிகரித்த[illegible] தெரிந்ததே.

# இராணுவத்தை அரசு நவீனப்படுத்துவதன் மூலம் அமைதி முயற்சிகளை வலுவற்றதாக்கிவருகிறது

## -சர்வதேச தமிழர் கூட்டமைப்பு முறைப்பாடு

இலங்கைத் தீவகத்தில் யுத்தத்தை உருவாக்கும் வகையில் சிறிலங்கா அரசு தனது இராணுவத்தை நவீனப்படுத்தி வருவதன் மூலம் அமைதி முயற்சிகளை வலுவற்றதாக்கி வருகிறது என ஐ.நா.சபையில் சர்வதேச தமிழர் கூட்டமைப்பு முறையீடு செய்துள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்தின் 61ஆவது கூட்டத்தில் இந்த முறையீட்டு மனு கையளிக்கப்பட்டது.

இலங்கைத்தீவில் வலுவற்ற அமைதி முயற்சிகள்- உண்மை அறிக்கை என்ற தலைப்பில் இந்த முறையீட்டு மனு அளிக்கப்பட்டது. தமிழர் கூட்டமைப்பு கையளித்த முறையீட்டு மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

இரு தசாப்தங்களாக போரினாலும் அண்மைய ஆழிப் பேரலையாலும் சிதைவடைந்து கிடக்கும் இலங்கைத் தீவகத்தின் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குப் பகுதியை மீளமைக்கவும், மனிதாபிமான பணிகளை மேற்கொள்ளவும் சர்வதேச நாடுகள் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்.

இனச்சிக்கலுக்கான இடைக்காலத் தீர்விற்கோ அல்லது நிரந்தரத் தீர்விற்கோ எவ்வித முயற்சிகளையும் சிறிலங்கா அரசு மேற்கொள்ளவில்லை. ஆழிப் பேரலையின் மீளமைப்புப் பணிகளிலோ மாற்றான்தாய் மனப்பான்மையுடன் சிங்கள அரசு நடந்துகொள்கிறது.

ஆழிப்பேரலையால் பெருமளவு உயிரிழப்புகளைச் சுமந்து நிற்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களை பார்வையிட வந்த உலக நாடுகளின் தலைவர்களுக்கு சிறிலங்கா அரசு தடைவிதித்தது.

இலங்கைத்தீவில் தமிழர்கள் மனிதாபிமான உதவிகளையும், மீளமைப்புப் பணிகளையும் சர்வதேச சமூகத்திடமிருந்து எதிர்நோக்க வேண்டிய அவலம் இருக்கிறது.

ஆழிப்பேரலை மீளமைப்புக்காக தமிழர்கள் முன்வைத்த பொதுக்கட்டமைப்புத் திட்டம் குறித்து சிறிலங்கா அரசு மௌனம் சாதித்தே வருகிறது.

அதே போல போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்ப தமிழ்மக்கள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் குறித்தும் சிறிலங்கா அரசு காலங்கடத்தி இழுத்தடித்து வருகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தப் படி தமிழர் தாயகத்தில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் களைந்துவிட்டு நிராயுதபாணிகளாக அரசியல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் சிறிலங்கா அரசோ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக புதிய புதிய ஆயுதக் குழுக்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உருவாக்கி வருகிறது. சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் இந்த ஆயுதக் குழுக்கள், நிராயுதபாணிகளான அரசியல் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்கள், தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ்க் கல்விமான்களைக் குறிவைத்துக் கொன்று வருகின்றனர்.

இத்தகைய சீண்டல் நடவடிக்கைகள் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கைவிட்டுவிட்டு போருக்குப் பிரகடனம் செய்யும் என்று சிறிலங்கா அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

சிறிலங்கா அரசோ தனது நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடிகளைப் பற்றியும் தமிழர்களின் மனிதாபிமான முறையீடுகளைப் பற்றியும் எதுவித அக்கறையுமின்றிப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு கனரக ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. இராணுவத்தை நவீனமயமாக்கி வருகிறது. பெருமளவிலான இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும், பயிற்சி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழர்கள் மீது பாரிய யுத்தம் ஒன்றை விரைவில் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகளை சிறிலங்கா அரசு திட்டமிட்டு வருகிறது. தமிழர் தாயகத்தில் இத்தகைய நிலை தொடர்ந்து நீடித்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதை எப்படி எதிர்கொள்ளும் என்பதை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நவம்பர் 27 ஆம் திகதி ஆற்றிய உரையில் அறிவித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் கூட்டமைப்பு கையளித்த 31 பக்க உண்மை விளக்க அறிக்கையில், ஆழிப்பேரலைக்குப் பின்னான தமிழர் தாயக நிலைமை, தற்போதைய அரசியல் சூழல், மறுக்கப்படுகிற மனித உரிமை மற்றும் அரசியல் உரிமைகள், தமிழர் தாயகத்தின் சமூக பொருளியல் நிலை, அமைதி ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் படுகொலைகள் குறித்த விரிவான தகவல்களை முன்வைத்துள்ளது.

2000 ஆம் ஆண்டு முதல் இன்றைய நாள் வரை தமிழர் இனச் சிக்கலில் நடந்த முக்கிய நிகழ்வுகள், தமிழீழத் தேசியத் தலைவரின் செயல்திட்ட உரையான மாவீரர் நாள் உரை, சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளே என்பதை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருந்த தேர்தல் அறிக்கை, புலிகளை தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டோருக்கு தமிழ்மக்கள் அளித்த வரலாற்றின் பக்கங்களில் இடம்பெறக் கூடிய வாக்கு விபரங்கள், தமிழ் மக்களை வாக்களிக்க விடாது சிறிலங்கா அரசு மேற்கொண்ட இராணுவ வன்முறைகள் ஆகியவை இணைப்புகளாக சேர்க்கப்பட்டுள்ளன.

### பிழையான....

மேற்படி சட்டத்தினை மேலும் நீடிப்பதற்கான பாராளுமன்றத்தின் மேலதிக வாக்குகளைப் பெற முடியாத நிலையிலேயே கைவிடப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டமும் ( தற்காலிக ஏற்பாடுகள்) நீக்கப்படாமல் தற்பொழுதும் நடைமுறையிலுள்ளது.

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்யப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் காரணமாகவே மேற்படி சட்டத்தினை வடகிழக்கில் உபயோகிப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் வடகிழக்குக் கரையோரத்தையண்டி மீன் பிடிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக ஒருமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சட்டம் அமைச்சர் கூறுவது போல வழக்கொழிந்து போகவில்லை. அச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம், நிரூபண நியமங்கள் பற்றிய சரத்துக்கள் புதிதாகக் கொண்டு வரப்பட்ட 2005 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசரகாலச் சட்டத்தின் (நானாவித ஏற்பாடுகளும் அதிகாரங்களும்), ஐ.நா. மனித உரிமைகள் குழுவினால் நல்லரட்ணம் சிங்கராசாவின் வழக்கின் (தொடர்பு இல. 1033/2001) தீர்ப்பில் ஐ.நா. சமவாய நியமங்களுக்கு அமைவாக திருத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தும், முன்னர் இருந்தது போலவே திருத்தப்படாமல் விடப்பட்டுள்ளது.

மேலும் ஆணைக்குழுவின் தீர்ப்பிற்கமைய அரசு தனது கீழ்ப்படியாமை காரணமாகத் தீர்ப்பினைப் பகிரங்கப்படுத்தவோ, அல்லது அவரை விடுதலை செய்யவோ அல்லது மறு விசாரணைக்கு உட்படுத்துவதோ இல்லை. இப்பொழுதும் கூட இந்த அரக்கத்தனமான சட்டத்தின் கீழ் பல தமிழ் இளைஞர்கள் சிறைகளில் வாடுகின்றனர்.

உண்மையில் சிறிலங்கா அரசாங்கம் சுனாமிப் பேரலை அனர்த்தத்தினைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டத்தினை, சனதிபதியினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒருவர், சந்தேகநபர் ஒருவரைக் ஏழு நாட்களுக்கு பிடிவிறாந்தோ, தடுப்பாணையோ இன்றிக் கைது செய்து, தடுத்துவைக்கவும், இடத்துக்கிடம் கொண்டு செல்லவும் கூடிய அதிகாரங்களுடன் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது.

சித்திரவதையினைத் தாங்கள் இம்மியளவேனும் ஏற்றுக் கொள்வதில்லை என்ற கதிர்காமரின் கூற்றும், உண்மைக்குப் புறம்பானதே. ஏனெனில் சித்திரவதை கீழ்த்தரமானதும், குரூரமானதுமான நடவடிக்கைகளுக்கு எதிரான 1994ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மேல்நீதிமன்றத்தில் இற்றைவரை 14 வழக்குகளே பதியப்பட்டுள்ளது. என சுட்டிக்காட்டியுள்ளார்.

# வறிய மக்களைப் பாதுகாக்க ஜே.வி.பி.தவறிவிட்டது

## -துணை அமைப்பு விசனம்

(கொழும்பு)

கூட்டமைப்பில் இணைந்த மக்கள் விடுதலை முன்னணி வறிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் ஒத்துழைப்பு முன்னணிப் பொதுச்செயலாளர் கலாநிதி கீமல் கருணாதாஸ் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறிய அவர், முதலாளித்துவத்துடன் இணைவதால் இடதுசாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் விடுதலை முன்னணியும் இன்று எதிர்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இந்தக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதன் மூலம்தான் வலதுசாரி வர்க்கத்தினரின் தேவைகளுடன் செயற்படும் மேலும் ஓர் அரசியல் கட்சியாக மக்கள் விடுதலை முன்னணி இன்று மாற்றமடைந்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சமசமாஜக் கட்சி போன்று வலது சாரிகளுடன் இணைந்து அமைச்சுக்களைப் பெற்று இசைவாக்கத்தையும் பெற்றுள்ளனர்.

வலதுசாரிகளுடன் இண்ணந்த இடதுசாரி அமைப்பு நிச்சயமாக அழிந்து விடும் என்றார் அவர்.

# அமைச்சரவை மாற்றம் ஒரு வாரம் பிற்போடல்

(கொழும்பு)

அடுத்து வரும் இரு வார காலப்பகுதிக்குள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் நடைபெறும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றம் இந்த வாரத்துக்குள் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது

எனினும் சீனப்பிரதமரின் வருகை எதிர்வரும் எட்டாம் திகதி இடம்பெற உள்ளமையால் இந்த நகர்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

இதேவேளை எதிர்பார்க்கப்படும் அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

## மின் விநியோக நேரத்தில் மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் இயங்கிவந்த மின்சாரசபையினரின் மின்பிறப்பாக்கியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் காரணமாக இன்று முதல் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணையின் பிரகாரம் மின்சாரம் வழங்கப்படவுள்ளதென வாடிக்கையாளர்களுக்கு மினச்சாரசபையினர் அறியத் தந்துள்ளனர்.

இதன் பிரகாரம் இன்று முதல் காலை 6.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரையும், நண்பகல் 12.30 மணி முதல் மாலை 4.30 மணிவரையும்,மாலை6.00 மணி முதல் இரவு 11.00 மணிவரையும் மின்சாரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் தாக்குதலில் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நேற்றுச் சுடப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு விஜயா திரையரங்கு வாசலில் நேற்றுப்பிற்பகலில் இந்தச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.மணி எனப்படும் ஆறுமுகம் அம்பிகைபாகன் (வயது-22) என்பவர் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கோயம்புத்தூர் மாப்பிள்ளை படம் பார்ப்பதற்கு அழைத்துச் சென்ற நபரே மணி மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வீரவணக்கம்...

தவறுதலான விபத்தொன்றின் போது தமிழீழ காவல்துறை வீரர் ஒருவர் சாவடைந்துள்ளார். தமிழீழ காவல்துறை வீரர்-சசிக்குமார் (நவரத்தினம்-சசிக்குமார். சோலையாவளவு ,தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.தற்காலிக முகவரி கண்டாவளை, புளியம்பொக்கணை,கிளிநொச்சி) என்பவரே சாவடைந்தவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### அக்கரைப்பற்று...

ஆறுமணி முதல் ஏழு மணிவரை இந்தத் தேடுதலை நடத்தியுள்ளனர்.

இதேவேளை படையினர் சென்ற பின்னர் அந்த அரசியல்துறை அலுவலகத்திற்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் வந்த சிறிலங்காப் பொலிசாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இல்லாமல் தனியாகவந்து அத்துமீறி அரசியல்துறை அலுவலகம் மீது தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டமை மீண்டும் ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறை தெரிவித்துள்ளது.

### தாக்குதல்...

தாக்குதல் நடத்தவேண்டியேற்பட்டது. விடுதலைப்புப் புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலை அடுத்து உப்பாற்று அருகில் 200 மீற்றருக்குள் நின்ற கடற்படைப் படகு அந்த இடத்தை விட்டு அகன்று சென்றது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதேவேளை இவ் விடயம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தாம் முறையிட்டுள்ளதாகவே திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மேலும் தெரிவித்தார்.

(25)


## பணிநிலை வேண்டுகை

ஈழாநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு ஒப்புநோக்குநர், ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** ஒப்புநோக்குநர்

**அகவை :-** 25இற்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும் (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**கல்வித்தகைமை :-** க.பொ.த (உ/த) பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்கள் அல்லது அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

**ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர் :-**

முன் அனுபவமும் அரசியல் குறித்த துறைசார்ந்த அறிவும் உடையோர் விரும்பத்தக்கது.

குறிப்பு:- உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

வேதனம்:- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் 06.04.2005(இன்று)காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனைக்குச் சமூகம் தரவும்

**நிர்வாகம்**


### பொதுக்கட்டமைப்பு....

ஆகியவற்றின் இலங்கை பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இதன் போது 100 மீற்றர் திட்டம் தொடர்பில் எதிர்க் கட்சிகள் தமது ஒப்புதலின்மையை வெளிப்படுத்தினர்.

திருகோணமலையில் இந்ததிட்டம் சாத்தியமற்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்

கிழக்குமாகாண முஸ்லிம் பிரதேசங்களில் அரசாங்கத்தின் திட்டமானது நடைமுறைப்படுத்தபட முடியாதது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற உள்ளதால் கட்சித்தலைவர்கள் அதற்கு முன்னர் கூடி ஆராய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை மீள்நிர்மாணப் பணிகளுக்காக பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் நேற்று எதிர் கட்சித்தலைவர்களால் வலியுறுத்தப்பட்டது.

ஜே.வி.பி இந்தத்திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது. இந்த நிலையில் அந்தக் கட்சியை பொதுக் கட்டமைப்புக்கு இணங்கச் செய்ய வேண்டியதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இல்லையேல் ஆழிப்பேரலையின் பின்னர் புனரமைப்பு என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகி விடும் என்றும் நேற்றைய நிகழ்வில் எதிர்க் கட்சித்தலைவர்கள் சுட்டிக்காட்டினர்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது